**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

T. M. Krishnamachari

T. M. Krishnamachari

1955.

உ

கடவுள் துணை

# தாயுமானசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திருப்பாடற்றிரட்டு

இஃது

நா. கதிரைவேற்பிள்ளை அவர்களாற்

பரிசோதிக்கப்பட்டதை,


சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

இரண்டாம்] 1929 [அணா-8.

உ

சிவமயம்.

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி

மகாவித்வான்

ஸ்ரீமத் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்ட

தாயுமானசுவாமிகள்

# சரித்திரச் சுருக்கம்

## வணக்கம்

வாயுமா ணவமலமு மறப்பிறப்புத் துறவறத்தான் மாற
வீசி, மாயும்வே தாகமத்தி னருள்வழியிற் சிவஞான வாரி
மூழ்கிப், பாயுமால் விடைப்பரம * னிருவியலும் பார்த்து
ணர்ந்து பதத்தி னொன்றுந், தாயுமா னவன்றனிரு சரண
மலர் சிரமதனிற் றரித்து வாழ்வாம்.

புராதனமெய்ச் சிவஞான போதமெனுஞ் சித்தாந்தப்
பொரு ளியாவுந், நாசமுனி யாகிநுவிச் சாயாம லநுபவத்
திற் றமிழைப்பாடிப், பராவுசிவ மயமாகிப் பரஞானத் தனி
மைமெதிப் பரிமேலேறி, நிராமயதே யத்தேசி நிறைதாயு
மானவனை நினைந்து வெல்வாம்.

---

* இரு இயல் ஆவன = தடத்த லக்கணம், சொரூபல
க்கணம் என்பனவாம். இவை முறையே பொது வியல்பு,
சிறப்பியல்பு எனவுங் கூறப்படும்.

உலகின்கண் ஒன்றோடொன்று முரணி விகற்பமாய்ப் பலவேறு வகைப்பட்ட சமயங்கள் போலாது, சமயாதீதமாய் முடிந்த நிலையதாகி விளங்கும் அத்துவித சைவ சித்தாந்தத்தை நிலைநாட்டிய தன்மையாளரும், பதி பசு பாசம் என்னும் முப்பொருளியல்புகளையெல்லாம் உலகமுணர்ந்துய்யுமாறு வைத்தருளிய தாயுமானவரும், எம்மவர்க்குச் சருவமானவரும் ஆகிய ஸ்ரீ தாயுமானசுவாமிகளது திருப்பாடல்கள் காரணமாக, அவர் ஒரு சமயத்தையுஞ் சாராத பொது நிலையர் என நூற் சாராரும், தமது விபரீத வாதக்கொள்கையையுடையார் என ஒன்மயவாதிகளாகிய மாயாவாதிகளும் மயங்குவாராயினர். இருவர் மாறுகோள் ஒருதலை துணிதல் எம்மவர்க் கிலக்கணமா யிருத்தலான், அவர் தம் கூற்றுகளையெல்லாம் அடிகளது சரித்திர வாயிலாகவும், திருப்பாசுர வாயிலாகவும் கடிவு நிலைபெறா ராய்ச் சுத்தசைவத் தன்மை காட்டுவான் புகுந்தெழுந்தன.

வேதங்களால் பூசிக்கப்பட்டதும், சுத்தாத்துவித சைவ சித்தாந்தம் என்னும் அகம் விளங்கிருப்பதும், புகழ்த் திக்கெங்கும் பொலிவதுமாகிய திருத்தலம் சோழநாட்டின்கண் கொடிக்கரையுள்ள ஸ்ரீவேதாரணிய புரியேயாம். அங்கு இற்றைக்குச் சுமார் 280-வருடங்களுக்குமுன்னர், வேளாள குலத்திலே, உருவித்துணைபோர் வகையினருள் தோன்றிய கேடிலியப்பபிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளின் முதிர்ந்து, குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்து, தம் பெயர்க்கேற்பக் கேடிலராய், அவ்வூ

ரச் செயல விசாரணைக் கர்த்தராயிருந்தார். அதுகாலைத் திரிசிரபுரத்திலே செங்கோனடாத்தி யரசுபுரிந்த ஸ்ரீமாந் முத்துவிசய ரகுநாத சொக்கலிங்க நாயகர் என்னும் வேந்தரேறு * பிள்ளை அவர்களது நற்குண நற்செய்கைகளோடும், கல்வி கேள்வி யறிவின்பெருமையையுங் கேள்வியுற்று வரவழைத்து, சிறந்த சம்பிரதி உத்தியோகத் தமர்த்தினர்.

பிள்ளையவர்கள் அரசனது வேண்டுகோட்படி உத்தியோகமேற்று, அதற்குரிய கடமைகளைக் குறைவறப் புரிந்துவந்தனர். அங்ஙனம் நிகழுநாளிலே தமக்கு ஒரேபேறு வாய்ந்த சிவ சிதம்பரப் பிள்ளை என்னும் அருமைக் குமாரனைச் சந்ததியின்றி யிருந்த தந்தமையனார்க்கு முன்னரே சுவீகாரமாகக் கொடுத்து விட்டமையால், தமக்குச் சந்ததி யுண்டாகத் திருவருள் செய்யுமாறு,

---

* பிள்ளை என்பது வேளாளர்க்குரிய காரணவரக்கப் பெயருளொன்று. இறைவனிடத் திருநாழி நெற்பெற்ற காமாட்சி யம்மையார், அதனை விருத்திசெய்தற் குரியார் இவரேயெனத் திருவுளங்கொண்டு "பிள்ளையே!" என்றழைத்தமையால் வந்ததெனக் காரணங்கொள்க. அது "உள்ளங்குழைந்தா புழவாற் பெருக்கவினை—பிள்ளையெனக் கூப்பிடப்பெறுங்கை" எனத்திருக்கை வழக்கங் கூறியதனாலும் பெறுதும்.

* தக்ஷிண கைலாயத்துள் ஒன்றாய திரிசிராமலைக்கணெழுந்தருளி யிராநின்ற தாயுமானேசுரரைத் திரிகாலங்க டோறும் தந்தேவி சகிதமாகச் சென்று ஒருமைப்பற்று மெய்யன்புடன் தரிசித்தும், நித்திய நைமித்திகாதிகள் செய்தும், விரத மநுட்டித்தும், தானஞ்செய்தும்வருவாராயினர். அக்காலை, பரதகண்டத் துன்னாரது தவமெலாந் திரண்டொரு வடிவெடுத்து வந்தாற்போலவும், மன்பதைகளின் மலவிருள் துமிக்க இம்மண்ணுலகிற் றோன்றுமாறு விமலன் விடுத்தருளியதோர் சித்தாந்த ஞானசூரியன் மானவும் மகவொன் றவதரித்தது. அப்போழ்தத் தந்தையார், அகமிகமகிழ்ந்து செய்யவேண்டியனவெல்லாஞ்செய்து, தாயுமானேசுரர்க்குக் காணிக்கை முதலியனவுஞ் செலுத்தி, சாதகருமமுஞ் செய்வித்தனர், சோதிடத்தில் வல்லார், "சுபவேளையிலே ஐந்துகோ ளுச்சமாகத் தோன்றி யதனால் இவர்தேவாம்சமாக அவதரித்தார் என்றும், அனைத்துலகையுமாள வல்ல சுரேந்திரராக விளங்குவர்" என்றுங் கூறக்கேட்ட இருமுது குரவர் மகிழ்ச்சியை யென்னென்பேம். தாயுமானேசுரர் அருளா லுதித்தமையால் அப்பிள்ளைக்கு அக்கடவுளின் பெயரையே நாமகரணஞ் செய்தனர்.

---

* திரிசிராமலை தக்ஷிணகைலாயத்துள் ஒன்றென்பது செவ்வந்திபுராணம், தக்ஷிணகைலாசபுராணம் என்பவற்றிற்காண்க. திரிசிரபுரம், திரிசிராப்பள்ளி எனவும் பெயர். இக்காலத்துத் திருச்சிறாப்பள்ளி எனவழங்கப்படுகின்றது.



அப்பால், தாயுமானசுவாமிகள் வடமொழி தென்மொழிகளிலுள்ள இலக்கிய இலக்கணங்களையும், வேத வேதாகமோப நிடத ஸ்மிருதி புராண இதிகாச முதலியனவற்றையும் நன்கு கற்று வல்லவராயினர். அவையன்றித் தேவார முதலிய பன்னிரு திருமுறைகளையும், மெய்கண்ட சாத்திரம், அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளிய திருப்புகழ் முதலியவற்றையும் தக்கவாறாராய்ந்து அன்புடன் பாராயணஞ் செய்தார். இங்ஙனம் வருநாளிலே தகப்பனார் இகவாழ் வொருவ, அரசன் அவரது சம்பிரதி உத்தியோகத்தை ஏற்குமாறு வலாற்காரஞ்செய்ய, மறுக்கவியலாதமையான் அதை ஏற்று நடத்தி வந்தார். தாயுமான சுவாமிகள் சம்பிரதி உத்தியோகத்திற் பதினொன்று வயதிலேயே அமர்ந்தாரென்ப. அப்போதில் ஓர்காரிய நிமித்தம் அரசனைக் காண்பான் போந்த சுவாமிகளது திருவடிச் சுவடுகள் அரண்மனையுட் புதுக்குவித்தற்காகக் கொட்டப்பட்டிருந்த மணன்மேற் பதிந்து செவ்வே விளங்கின. பிரதானியும் அரசனும் அவ்வழிவந்தார் பதும ரேகை பதிந்து காணுஞ் சுவடுகளைப்பார்த்து மிக்க ஆச்சரியமுற்று, யாவர் இவ்வழி வந்தார் என, ஆங்கு நின்றார் சம்பிரதி யாரே வந்தவர் என்றனர். அரசனும் பிரதானியும் ஐயுற்று, அவ்வுண்மையாராய்வான் சுவாமிகளை அழைப்பித்துப் பின்னர் அனுப்பி விட்டுச் சுவடுகளையொத்து நோக்கித் தஞ் சந்தேகந்தீர்ந்து மகிழ்வுற்றனர். பிரதானி அரசனைப்பார்த்து அரசரேறே! சம்பிரதியாரது அழகைக்கண்டு ஆடவரு மவாவுவரன்றோ?

"இலக்கெழிலவையு குணமென வுரைப்பர்" இதற்கு மேற் சொன்ன அவரையே யிக்காலத்து யான் நேருறக் கண்டேன். அவரது வடிவத்தை உற்று நோக்கியுள்ளேன்.

அகவடி யுகிர்விரல் புறவடி கரடே
கழலே கணைக்கால் முழந்தாள் குறங்கே
கடிதடங் கொப்பூழ் வயிறதின் வரையே
யிடையே மயிரி னொழுக்கே முலையுகிர்
விரலே முன்கை யங்கை தோளிணை
கழுத்தே முதுகை செவ்வாய் மூக்குக்
கண்ணே காது புருவ நுதலொடு
மாணுறக் குறுப்புட னிரண்டும் பாதம்.

என்று சங்கப்பாட்டியலிற் கூறப்பட்டபடி, அவரது முப்பத்திரண்டு உறுப்புக்களும் ஆண்டன்மையோடு தெய்வத் தன்மை சிறந்து, சாமுத்திரிகா லக்ஷணங்கள் நிரம்பப்பெற்று விளங்குகின்றன. அவர் இன்னுஞ் சிறிது காலத்துள் உலகமெலாந் தன்னேவல் கேட்ப ஆணைசெலுத்தும் மகைஸ்வரிய மகுடதாரிய மகா மண்டலாதி பதியாகிப் புகழ் கிருவதொருதலை. நிருபரே! அவரது காற்சுவட்டிற் பிரகாசிக்கும் பதும ரேகைபோல் எவர்க்கு மிருப்பதை யின்ஞான்றுங் கண்டு கேட்டிலேன். அவரது நெடுங்கரங்கள் கணைக்காலின் கீழ்த்தாழ்ந்திருப்பது நீருங் கண்டிலிரோ? என்று கூறினன். அது தொடங்கி நாயகன் அவரிடத்து மிக்க பிரீதியும் அச்சமு முடையனாயினன். இருவினையொப்பு


நெடுங்கால மாதலால் இவர்க்கு உண்மை யாராய்தலே பெருங்கடமை யெனத் தோன்றிற்று. அரசனிடத்திற் கவிராயர், கவிச்சக்கிரவர்த்தி, பண்டிதர், பாரதி, பாவலர், நாவலர், வித்துவான், மகாவித்துவான், வித்துவசிரோமணி, ஆசிரியர், புலவர் முதலிய பட்டங்களைத் தரித்துச் சன்மானம் பெற வருவோர் எவரையும், யதார்த்த வாதஞ்செய்து தக்க விடை கொடாமையால் "உண்மைகாணுதிர்" என்று விடுப்பார். அரசனும் இவரது இளம்பருவத்தையும், கல்வி கேள்விகளின் அருமையையும், அதற்குத் தகுந்த வொழுக்கத்தையுங் கண்டு களிவியந்து பேரன்புடைய னாயினன். தலையிற் றீப்பிடிக்கக்கண்டான் வேறொன்றினையும் நாடாது தண்ணீரையே தேடுவதுபோல, இவரும் தம் ஐயங்களை யொழித்து உண்மைகாட்ட வல்ல, ஞானாசிரியர் யாண்டையர்? எற்றைத்தினத் தெதிர்ப்படுவர் என்றேக்கமுற் றெதிர்பார்த்திருந்தார்.

அங்ஙன மொழுகுநாளிலே, அடிகளார் பிறவிதோறும் ஈட்டிய பெருந்தவப்பேறு காரணமாகவும், இற்றைநான்றும் பிற்றைநான்று மன்னுயிர்கள் முப்பொருளி னுண்மையறிந்து, சித்தாந்த நிலையேறிச் சிவஞான வீட்டாபரராய், அத்துவித முத்தியை யடைதற்குச் சாதனமானவற்றை யோதுவிக்கு முண்மை காரணமாகவும், திருவருண் ஞானப்பெருஞ் செல்வப் பிழம்பாகிய திருமூல நாயனார் மரபிலே தோன்றி, திருக்கைலாய பரம்பரைச் சந்தானமாகிய மெய்கண்டதேவ நாயனாரது வழிக்குரவரிடத்து

ஞானோபதேசம்பெற்ற சற்குரு மூர்த்திகளாகிய மௌன குரு சுவாமிகள் திரிசிராமலைப் பரமநாதனைத் தரிசிப்பான் ஆண்டுற்றனர். நந் தந்தையுமான தாயுமானவர் அவரைக் கண்டமாத்திரையே, தலைவனைக் கண்டெழுந் தன்வயமிழக் கும் உழுவலன்புடைப் பதிவிரதைபோலப் பரவசப்பட்டு, காந்தங்கண்ட ஊசிபோன்று தம்மனம் அவர்பாற்பட்டிழுக்கப் பட்டாராய், அடியுற வணங்கி, "எம்பெருமா! நுந் திருக்கர த்துள்ள புத்தகம் யாதோ" வென்றனர். குருசுவாமிகள் யா தொன்று முரையாராய் ஏகினர். பின்னரும் பன்முறை வினவி நிழல்போல் தொடர்ந்தனர். அவ்விடங்கடோறும் சுற்றித் திரிந்து, தொடங்கிய யாமம் பதினைந்து கடிகை யளவிலே தாயுமானவர் சந்நிதி சென்று * பதுமாசனத் தமர்ந்த மௌனகுருசாரியர் இவர் பக்குவங்கண்டு "சிவ ஞான சித்தி" என்றனர். தாயுமானவர் அகமிகமலர்ந்து, அந்த நாளிலே வாதவூர் நாதனை ஞானபோதத்தா லெடுத் தொலைத்துச் சாதங் காட்டிப் பாதமளித்தாண்ட பரமபதி, இந்த நாளி லெளியேனையும் ஞானசித்தியால் மோனபத்தி

---

* பதுமாசனமாவது யோகாசனங்களுள் ஒன்று. அஃ தாவது இடப்பக்கத் தொடையின்மேல் வலக்காலினையும், வலப்பக்கத் தொடையின்மேல் இடக்காலினையும் மாறவை த்து, இருகாற் பெருவிரலை, யிருகரங்களாலும் மாறியுறப் பிடித்திருத்தல். அதனை "சவ்வியபாத ஊருமேல்" என்னுங் குருசங்கிதைச் செய்யுளானறிக.



பணித்தாட்கொள வெழுந்ததோ வென்று துதித்து, அருட் கடலே !

1—சிவம் யாது ?

2—ஞானம் என்பதென்னை ?

3—சித்தி எது ? என்று வினவ, ஆசாரிய சுவாமிகள் அவரை நோக்கி, அன்புளாய் !

1—சிவம் என்பது பதி.

2—ஞானம் என்பது அந்தப்பதியை உள்ளவாறறியும் அறிவு.

3—சித்தி ஆவது அவ்வறிவை வருவிப்பது என்றார். தாயுமானவர் கேட்கத் தவராச !

1. அப்பதிப்பொருள் ஊர் குணம் குறி செயல் பெயர் முதலியன வில்லாதது, சொல்லளவைக்கும் பொருளளவைக்கு மெட்டாதது, என்று வேதாகமங்கள் முழங்கவும், தேவரீர் அவையிற்றிற்கு மூலமாகச் சிவம் என்றல் பொருந்துமோ ?

2. சிவம் எனவே, அசிவம். (அமங்கலம்) சிவாசிவம் (மங்கலாமங்கலம்) என்பனவும் பெறப்படலால் அப்பொரு ளெவை ?

3. அப்பொருள்கள்சிவத்திற்குப் பேதமோ, அபேதமோ, பேதாபேதமோ ?

4. வியாபகமோ? வியாப்பியமோ? வியாத்தியோ? சசாதியோ? விசாதியோ? சுகதபேதமோ? இவை அல்லனவோ?

5. "உண்மையுமா யின்மையுமாய் இருப்பவன் பதி" என்றுன்றே சருளிய தன்மையாயின், சிவம் (மங்கலமுடையது) எனக்கூறல் சால்பேயோ? என்னை? அமங்கலம், மங்கலாமங்கலமும் அவனேயாகலான்.

6. பிரமப்பொருளன்றி யிரண்டாவது பொருள் இல்லையென்று வேதம் கூறவும், சிவஞானம் என்பதற்குப்பொருள் சிவனையறியும் அறிவு எனின். சிவன் ஞேயப்பொருளாகவும், ஞானம் காட்சிப் பொருளாகவும் முடிதலால், ஞாதுரு (அறிபவன்) ஞானம் (அறிவு) என்பனவெவை?

7. அந்த ஞாதுரு பரிபூரணனாய சிவனுக்கு வேறு நின்று அறிவனோ? ஒன்றாய் நின்றறிவனோ? வேறும் ஒன்றுமாய் நின்றறிவனோ?

8. சிவன் அறியப்படுமேல், அறி பொருளெல்லாம் சடமாகியும், அழிவனவாயும், விகாரப்படுவனவாகியும், அறிவானுக்கு வேறாயாகியும், கண்டப் படுவனவாகியும், விளங்கு முண்மையால், அவனும் சடத்துவம், அழிவு, விகாரம், பேதம், கண்டப்படுகை முதலிய தன்மையனாய், நித்த சத்து, நிர்விகாரம் அத்துவிதம் அகண்ட முதலியவற்றை யிழக்குமன்றே.

9. அறியப்படுதல் கருவி கூடியவிடத்தோ? கழன்ற விடத்தோ? கூடிய விடத்தெனின் கருவிகள் எல்லாம் பசு பாச ஞானங்களாகலின் அந்த ஞானங்களை அறியப்படா வோ? கழன்றவழியெனின் அறிதலெங்ஙன்?

10. இவண் அறியப்படுதல் ஐயக்காட்சியானோ? திரிபு காட்சியானோ? மானதக் காட்சியானோ? சையோகம், சையுத்தசமவாயம், சையுக்த சமவேத சமவாயம், சமவேத சமவாயம், விசேடண விசேடிய பாவம் என்னும் வகைத்தாய வாயிற் காட்சியானோ? தன்வேதனைக் காட்சியானோ? யோகக்காட்சியானோ? விகற்பக் காட்சியானோ? நிருவிகற்பக் காட்சியானோ? சுவார்த்தாநு மானத்தினுலோ? பரார்த்தாநுமானத்தினுலோ? சபக்கம், விபக்கம், சபக்க விபக்கம், ஒப்பு, பரிசேடம் உளவாதல்களாலேயோ?

11. ஞானம் அறிவானுக்கு இயற்கையா? செயற்கையா? இயற்கையெனிற் சித்தித்தல் வேண்டா. செயற்கையெனிற் சித்திக்கமாட்டா அஞ்ஞானமுமக்கணேயன்றே?

12. அங்ஙனஞ் சித்தித்தல், * சமுதாயவாதமோ? ஆரம்பவாதமோ? விவர்த்தவாதமோ? பரிணாமவாதமோ? விருத்தி வாதமோ?

---

* சமுதாயவாதமாவது எள்ளானாய குப்பை யென்பது. இது புத்தர் சமணர் கொண்டமதம். ஆரம்பவாதமாவது நூலாலாகிய ஆடைபோல்வ தென்பது. இதுதார்க்கிகர்

[என்றின்னனவாய தம் ஐயப்பாடுகளை யெல்லாம் விண்ணப்பிக்க குருசுவாமிகள் புன்னகை புரிந்து, சகல வர்க்கத்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கும் உபதேச முறைநுண்மையை ஓர்ந்து]

* ஔத்திரி தீக்கைக்கு அவசப்போது அருகரல்லாமையால் அதற்கு அங்கமாயுள்ள † அறுவகைத் தீக்கையுமான வியற்றி, மைந்த! நீ வினவிய ஐயப்பாடுகளை யெல்லாம் அறுத்து, விபரீத ஞானத்தையும் வீட்டி, சிவஞான நெறி

---

மதம். விவர்த்த வாதமாவது கயிற்றிற் பாம்பு போலவும், பேய்த்தேராகிய நீர்த்தோற்றம்போலவும் உள்ளதென்பது இது ஏகான்மவாதிகளாகிய மாயாவாதிகள் மதம். பரிணாம வாதமாவது பாலினுண்டாகிய தயிர்போல் முற்றும் பரிணமித்தலும், செம்பினுண்டாம் புழுப்போல ஏகதேசத்திற் பரிணமித்தலும் என இருவகைத்து. படங்குடிலாதல் போலவும், வித்து மரமாதல்போலவும், உள்ளது விருத்திவாதம்.

* ஔத்திரி - ஹுத சகிதமாகப் பண்ணுவது. ஹுதசகிதம்-ஓமத்தோடு கூடியது. அது கிரியாவுத்திரி, ஞானவுத்திரி என இருவகைப்படும்.

† அறுவகைத் தீக்கையாவன:—சட்சு தீக்கை, பரிச தீக்கை, வாசக தீக்கை, மானத தீக்கை, சாத்திர தீக்கை, யோக தீக்கை என்பனவாம். இவற்றை வருணபத்ததி, சைவசந்நியாச நிர்ணயம், காமிகாகமம், சித்தாந்தசேகரம், ஞானப்பிரகாச வியாக்கியானம் என்பவற்றிற் பரக்கக்காண்க.

ஒழிய அத்வைத ஞானத்தைக் கொடுப்பது இந்நூலேயாம் ஸ்ரீமத் சற்குரு மரபி லிலகிய சகலாகமபண்டிதரென்னும் அருணந்தி சிவாசாரிய மூர்த்திகளா லருளப்பட்டது. இந்நூலைப் பூசித்துப் பாராயணஞ்செய்து வருகின்றோம். சிவஞானபோதவழி நூலாயுள்ள இது வேதாகமசாரமாகிய சித்தாந்த வியல்பினையெடுத்துத் தாபித்தலாற் சுபக்கம் என்றும், வேதாகமங்கட்குப் புறப்புறமாகவும், புறமாகவும், அகப்புறமாகவும், அகமாகவுமுள்ள சமயக் கோட்பாடுகளை யெடுத்துக் கண்டனஞ்செய்தலாற் பரபக்கம் என்றும் இருவகைப்படும். மாணவ!

* "பாரிலுள்ள நூல்களெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
யோர்விருத்தப் பாதி போதும்."

என்று, அவர் வினவிய வினாக்கட்கெல்லாந் தக்க விடை கொடுத்துச், சித்தாந்த சாத்திரம் பதினான்கினையும் முறையே உபதேசித்தருளினர். பதிலக்கணம், பசுவிலக்கணம், பாசவிலக்கணம், ஞானஞ்ஞான இலக்கணம். அத்துவித விலக்கணங்களை யெல்லாம் போதித்தருளுங் காலத்தில் தேசிகநாதர் 'இருவினையொப்புத்தியாகி சீருமாகி" நூலினை முன்படைத்தானைத் துதித்துத் தன் பொன்னடிக்கே "வழிநெசயா யிசைப்பயனு மின்னருளா லென்றுடைய தோழனு

* இதனை "பாதிவிருத்தத்தா லிப் பார்விருத்தமாக வுண்மை—சாதித்தார் பொன்னடியைச் சாருநா ளெந்நாளோ" என்று குருமரபின் வணக்கத்துள் தாயுமானவர் அறிவுறுத்தலுங் காண்க.

லைட" பன்னிருதம் பரத்திறையின் சுவை யென்னிறுதி யெனக்கரிசனந் தருமுடன்னி துன்று முன்றுவிடில் விட்டி டில்" எனவருடம் தேவார அருட்பாக்களையும், "இன்று எனக்கருளிருள் கடிந்துள்ளத்தெழுகின்ற ஞாயிறே போன்று - சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றும்" ஆகியமந்திரமு மில்லைவரும் பெருஞ்சோதி யை" எனவருடைத் திருவாசகத் திருவருட்பாக்களையும், "உற்றவர் பெற்றவ ரற்றவர் முற்றும் - அற்றவர்க் கற்றவ னல்லவர்க்கு" எனவருடம் இருபாவிருபஃதின் செய்யுளை யும்,

குமர குருபர குணதர நிசிசர
திமிர தினகர சரவண பவகிரி
குமரி சுதபதி யகிதவு கரப்பிரி குமரனும்
அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவையறிவது பொருளென அருளிய பெருமாளே.

என்ற திருப்புகழின் திருப்பாவையும் ஒவ்வொன்றையும் உதாரித்துண்மை காட்டினரென்ப. அதுபற்றி யன்றே தாயுமான சுவாமிகளும் தாம் அருளிச்செய்த அரிதுருளைக் கண்ணியில்,

"இருள்கெடுக்குந் தியான மென்ற திருப்பாட்டின்
பெருகுநிலையைக் கண்டுநிற்கப் பேச்சறுவதெந்நாளோ."

என்பது முதலாக அருளியதை யெல்லாம் மெய்த்தாண்டு மன் பதைப் பகர்ந்தாரைத் தம்வயப்படுத்தினர். இற்க, இங்ஙன

தேசத்தாரே வைதிக சைவ சுத்தாத்துவித சைவசித்தாந்தமே உண்மைநிலை யென்றும், சிவபெருமானே பரம்பதி யென்றும், அவருடன் இரண்டறக் கலத்தலே அத்துவித முத்தியென்றும் உணர்ந்து உலகாசையைத் துறந்து முமுட்சுத்துவ முற்றார். மௌனதேசிகர், "நீ இன்னுஞ் சிறிது காலமிருந்து இல்லற நடாத்திப் புத்திரனையீன்று இருத்தி ; பின்னர்யாம்வந்து நிட்டைகூடு முபாயமளிப்போம்" என்றனர். ஆசாரியர் பிரிவையாற்றாமல் தாயுமானவர் வருந்த "சும்மா இரு" என்று அகன்றனர். இவற்றைச் சுவாமிகளது திருப்பாடலில் மௌனகுரு வணக்கத்துள்,

சிந்தையற நில்லென்று சும்மாவிருத்திமேற்
    சின்மயா னந்த வெள்ளத்
தேக்கித் திளைத்துநா னதுவா யிருக்கநீ
    செய்சித்ர மிகநன் றுகாண்
எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழ்கவரு
    ளிய * நந்தி மரபு வாழ்க

---

* நந்தி மரபு ஆவது - தக்ஷிணாமூர்த்தி சிவஞானபோதத்தைத் திருநந்தி தேவர்க்கு உபதேசிக்க, அவர் சனற்குமார முனிவர்க்கும், அவர் சத்தியஞான தரிசனிகளுக்கும் அவர் பரஞ்சோதி முனிவர்க்கும், அவர் மெய்கண்ட தேவர்க்கும், அவர் அருணந்தி சிவாசாரியர் முதலாயினோர்க்கும், அவர் மறைஞான சம்பந்த நாயனார்க்கும், அவர் உமாபதி சிவாசாரியர்க்கும், அவர் அருணமச்சிவாயர்க்கும் உபதேசித்த வரன்முறைவழியாம்.

வென்றடியர் மனமகிழ வேதாகமத்துணி
 பிரண்டில்லை யொன்றென்னவே
வக்கருது வேதசிவ ஞான சித்திநெறி
 மௌனஉபதேச குருவே
மந்த்ர குருவேயோக தந்த்ர குருவே மூலன்
 மரபில்வரு மௌனகுருவே. என்றதனாலும்

“வேதாந்த சித்தாந்த சமரசநிர் வாகநிலையும்”

“சமய கடைசாராமல் வேதாந்த சித்தாந்த சமரச நிலையநுபூதி, மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டபின் வாழ்வித்த ஞான குருவே” என்றதனாலும்,

* “காட்சியது மானமுத லாகவிதக்க ளோர்ந்து
காறுமெனைக் கூழறு படைபுடை பெயர்த்திடவு
நாலுசாதனமு மோர்ந்திட்

¶ டனுபக்க சம்புபக்க மாயிரு விகற்பமும்” என்றதனாலும் அறிக.

---

* காட்சி முதலியன வென்றது, காண்டல், கருதல், உரை, இன்மை, ஒப்பு, ஒழிபு, உண்மை, உலகவழக்கு, இயல்பு என்னும்பொருளளவையெண்க. காறுமெனக் கூழறு படையாவது மாயாவாதக் கொள்கை. நாலு சாதனமாவன—நித்தியா நித்திய வஸ்துவிவேகம், இகமுத்திரார்த்த பலபோகவிராகம், சமாதிஷட்க சம்பத்து, முமுட்சுத்துவம் என்பனவாம்.

¶ அநுபக்க சம்புபக்கமாவது – சிவபெருமான்பஞ்ச கிருத்திய நிமித்தம் கவிபேதங்களாகும் இருவகைப்பகுதி, அவற்றின் விரிவை, யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாசமுனி வர் செய்தருளிய “சித்தியார்” உரைக்கண்டுணர்க.

இப்பால் ஆசாரியர் சேதுதரிசனஞ்செய்து, குமரிமு னிப்பொதிய மலையேபோய் அகத்திய பகவானை யடைந் தருள்பெற்று கட்டடவி யெய்தினர். சண்டுத் தாயுமான சுவாமிகள் உபதேச மொழியினை யெல்லாஞ் சிந்தித்து அவ்வாறின்படி யொழுகலால் விரத்திதோன்ற, இம்மையி லத் தொழிலை மறந்திருந்தார். சொக்கலிங்க அரசன் அவ ரது தன்மையினையெல்லாம் கேள்வியாயினா னறிந்தும், அற்புதத் தன்மையான பல செய்கைகள் அவரிடத்து நிக ழ்ந்தமை கேட்டும், அச்சமும் அதிசயமும் அன்பும் உற்று, அவரை யழைத்து உயர்ந்த ஆசனத்தி லெழுந்தரு ளச்செய்து, சுவாமி! தேவரீரது மகிமையினை அறியாமை யால் என் உத்தியோகத்தில் அமர்த்தினேன். இனிமேல் தேவரீருக்கு யானே குற்றேவல் செய்யப் பணித்தருளவே ண்டுமென்றான். அதற்கவர்க்கு முடிவுவண்ணம் ஒழு ங்கான கலாயின் * சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்ப வற்றையெல்லாம் அநுட்டித்தற்கு விரியபாத சோபான முரைத்தார்.

---

* சரியையிற் சரியையாவது - திருக்கோயில் அலகி டல், மெழுக்குச்சாத்துதல், நந்தவனம் வைப்பித்தல், தல தீர்த்தயாத்திரை செய்தல் முதலியன. சரியையிற் கிரியை யாவது இடபாரூடர், கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், உமா மகேசர் முதலிய இருபத்தைந்து மூர்த்திகள், விநாயகர், கந்தர் முதலிய ஆவரண மூர்த்திகள் என்பவற்றுள்ஒன்றை வழிபடுதல். சரியையில் யோகமாவது நெஞ்சின்கண் சிவ ன்ட வுருத்திர மூர்த்தியைத் தியானித்தல். சரியையில் ஞானமாவது அத்தியான பாவனையின் உறைப்பினுள்மெய் யநுபவவுணர்வு நிகழ்தலாம்.

அக்காலை யரசன் மன்றாடி வொருவினன். அரசன் மனைவியினது அழகைப் பன்முறை கண்டுள்ளா னாகலின் ஆசைமீதூர்ந்து அவரிடஞ்சென்று, "என்னை நாட்டுக்குத் தேவரீரைத் தலைவராக்குவல், என் உடல், பொருள், ஆவிமூன்றுந் தம்மதே. என் வேண்டுகோட் கிணங்கி யெளியேனது பெருங்குறையை முடித்தருளவேண்டு" மென்று இரந்தான். பெருமானார் அவன் மனமடங்க வேண்டிய நீதிகளையெல்லாம் உரைத்து அறிவு வரச்செய்து, தாபதப் பக்கமாகி இங்கிருத்த லன்றன்றென் றுணர்ந்து இராமநாத புரத்தினின்று எழுந்தருளினர். அதனைத் தமையனாராகிய சிவசிதம்பரப்பிள்ளை அவர்களும், சிறிய தாயார் குமாரராகிய அருணைப்பிள்ளை அவர்களும், கேள்வியுற்று, அங்குச் சென்று சக்தி விளங்கும்படி திருமணஞ் செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவர்க்கு அவ்விடத்தைத் பிரியவில்லாதிருக்கும் தங்குரு சுவாமிகள் தாங்களை மறுவாதலானும், தமையனார் வேண்டுகோளுமன்ன தாகலானும் மறுத்தல் பாவமென் றெண்ணி யுடம்பட்டு, தங்குலத்தித் தோன்றிய மாட்சி வாய்ந்த கன்னிகையொருத்தியைத் திருமணம் புரிந்தனர். இல்லறத்தோடு தாமரையிலைநீர் போலத் கூடி யில்லற தருமங்களையும் நடாத்தி வந்தார். அதுகாலை மங்கையர்க்கரசியாந் தேவியார் ஓராண்மகவை யீன்றுவைத்துச் சிவபதமடைந்தனர். அக்குழந்தை பெயர் கனகசபாபதிப்பிள்ளை. அக்குமாரரும் "மகன்றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்"



ளைப்பதற் கிலக்கியமாய் விளங்கினர். தாயுமானாரும் * கிரியாபாத வாழ்க்கையுமுடித்து, யோகபாத சோபான முற்றுஞ் செய்யவேண்டி மௌனதேசிகர் அருளொழுக்கருளி ஞானயுக்தியி லென்னுக் கிட்டைசெய்து, யோக நிட்டையி னியல்புகளை யுணர்த்தி அதைப்பெற ஆக்ஞாபித்துச் சென்றனர். அது தொடங்கி அடிகளார் மௌனதாரியாய் வெளிப்பட்டு † யோகபாதத்தை யநுட்டித்து, சிவஞானப் பெருஞ்செல்வமாய் நிட்டை கூடுவோராயினர். சொற்கிடைக்கனும் பிரதானிகள் முதலியவரோடு புலிராசர் கவிராசர் ஆகியமற்பனைகள் யாவரும் போற்றும் சிவயோகத்தவ ராசராயினர். அரசர்கள் மலை, நதி, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை யென்னுந் தசாங்கத்துடன், வெண்கொற்றக் குடை, கவரிமுடி, சிங்காசனம் என்னுஞ் சிறப்புடையா னல்லினையும் உடையராதல்போலத் தாயுமான சுவாமிகளும்

---

* கிரியையிற் சரியை யெவ்வுணர்க்கு வேண்டப்படும் உபகரணக்களை யெல்லாஞ் செய்துகொடல் கிரியையிற் கிரியை இருதைச்சுத்தி மூன்றுஞ் சிவலிங்க வழிபாடுசெய்யும் பூசனை. கிரியையில் யோகம் அகத்தே தநுச்ச தியானம் மூன்றாற்றும் மூலிடம் வருத்துக்கொண்டு செய்யும் அக்கினியாகம் கிரியையில் ஞானம் அவ்வக்கிரியாசுவுணர்ப்பின்கள் நிகழும் தோ டயவுணர்வு.

† இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம் என்னு நான்கும் யோகத்திற் சரியை, பிரத்தியாகாரமுந் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதியோகத்தில் ஞானம் என்க. இவற்றையோகாசிரியவிளும்" திரிவிட. மாயாதிபத்திகாம், தத்துவப் பிரகாசத்தினுங் காண்க.

அவாவின்மை, மெய்யுணர்வு, அநவாரியகுணம் என்னும் மலையும், நித்தியானந்தம் என்னும் நதியும், வேதமுதலிய கலைகளாலும் அறிதற்கரிய சிற்சத்தித்தானம் ஆகியகாடும், அநுபூதி என்னுஞ் சுத்தப் பெருவளமுடைய ஊரும், விடயவழிச்செல்லாமல் நிறுத்தித் தன்வயமாக்கும் அருள் என்னும்மாலையும், எவ்வெப்பொருளி னிடத்தும் விரைந்து சென்று அவ்வப்பொருளாய் நிற்கும் வியாபகத்துவம் என்னும் குதிரையும், வினைக்கட்டறுத்துப் பாசப்பகையை வெதிக்கு, அன்பாகிய வேகமுற்ற ஆரணி சென்னி உரோதயித்திரி என்னுஞ் சத்திகளாகிய மும்மதங்களுடன் தந்தவ கூட்டங்களுட் புகுந்து ஆனந்தத்தேனையளிக்கும் சிவஞானம் என்னும் யானையும், சமய நிலைகளுக்கெல்லாம் மேற்பட்டு, அத்துவிதப் பெரும்பயனை விளக்கித் தன்பச்சைமையை நீக்குந் தேசுவாய வைதிக சைவ சித்தாந்தம் என்னும் வெற்றிக்கொடியும், தசகாடிகளுக் தசகாரமாகத் தோன்றவின் நாதம் என்னும் முரசும். பிருதிவி முதல் நாதமீறாய் அகம்புறம் என்னும் கருவிகளாலிவிளக்கும் உலகமெங்கணுமுள்ள ஆன்மாக்களுக்கு அறிவித்தல் என்னும் ஆணையும் ஆகிய தசாங்கங்களுடன், எயற்றையும், ஒருசேசவெரியல்பான் அறிபும் பேரறிவு என்னும் ஒரு பெருஞ்சுடர்முடியும், மும்மலப் பகையாலேனும் பிறவியாதனையையும் போக்கித் தன்னடிக்குள் வைத்துப் பேரின்ப நிழலைச்செய்யும் அந்தண்மை என்னும் வெண்கொற்றக்குடையும், சமாதி என்னுஞ் சிங்காதனமும் உடையவராய், மனம் புத்திசித்தம் அகங்காரம் என்னும் சதுரங்க சேனைகளுக் தம்மேயல் கேட்டடங்கி நிற்க, மும்மண்டலத்திறும் தல்லின்னாக்குச்செல்ல * நவராசாராய்விளங்கினர் என்க.

நில வுலகத்துள்ள உயிர்களெல்லா முணர்த்திடறக்

திருவுளத்தானே தம் அநுபவசாரங்களையெல்லாந் திரட்டி அத்தியற்புத திருப்பாடல்களாகப் பொழிந்தனர். அவற்றையெல்லா முடனிருந்த அருளையர் முதலாய மாணவர் எழுதினரென்ப. சுவாமிகள் அருளையர்க்குத் துறவுபதேசஞ்செய்து, இராமநாதபுரஞ்சென்று ஆங்கேயே சிவத்தோடு இரண்டறக் கலத்தலாகிய அத்துவித முத்தியையடைவான் சமாதிகூடினர். அருளைய சுவாமிகள் அகவற்பாவினாலே சுவாமிகளைத் துதித்து, சிவயோக சாதனராய்க் கனக சபாபதிப்பிள்ளை அவர்கட்கு மெய்யுணர் வருளித் துறவுற்றார். இக்குருபரம்பரையில் தஞ்சைமா நகரின் கீழ்ப்பால் அன்னப்பன் பேட்டையிலுள்ள அம்பலவாணசுவாமிகள் ஆதீனத்தில் அருணாசலப்பிள்ளை என்பார் இருந்தனர் என்ப. இச்சரிதம் வேதாரணிய ஆதீனத்திலேயுள்ள சந்தான நிஷ்டாசாரிய சுவாமிகளது உபதேசப்படியும் திருப்பாடற்படியும் எழுதப்பட்டது. ஏனைய சரிதங்களையெல்லாம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் சென்னை ஞானபோதினியில் ௫-புத்தகம் இலக்கச் சஞ்சிகையில் வெளிப்படுத்தினர். ஆங்குப் பார்க்கவென்று கொள்க.

தாயுமானசுவாமிகள் சரித்திரச்சுருக்கம் முற்றிற்று.

---

* தவம் என்றது கண்டுச் சிவஞான நிட்டையை. அதனை "ஐம்புலவேடரி னயர்ந்தனை வளர்ந்தென - தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட் டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே" என்னுஞ் சிவஞானபோதச் சூத்திரத்தா னறிக.

## திருப்பாடற் சிறப்பு

வெண்மருவு விரிசடையான் வேதவனத்தான் விடையேச, றுன்மருவத் திருமூலனுறவின் மருவுமொருமையனை, வன்மைவருளுங் கருணைவெள்ள வாரிமலிந்தே மறைசாகரப், பின்னோர் முனிவ னருண்மூலவாய்ப் பெய்தான் கருணைத் தமிழ் மழையே.

திருமூலன் மரபினெழும் குருமணி திருவருணந்தி கட்டிவளி, யருளுரு மானந்த வநுபூதிச் சாரமென மருத் திகாளு, மருவேறு பிருவொட மறைக்காட்டிமெழுத்தாவ மாலேறுன் ஞானப், பொருளாகுஞ் சித்தாந்தத் தமிழ்மழையை யுவகையாய்ப் பொழிந்தான்மாவே தா. 2

செகப்பளிமட மிலமேவுஞ் செல்வத்திப் பெருமனருள் செய்யவளர்மிப். பரபரமு மெக்காளும் வைபக்கனியும் பல பாவும் பாடிப்பாடித், தாதலமா ஞானச்செல்வக் தன்னை முதாத்தகத்தருளுங் தாயுமானை, சிராமயரு மருள்பெரிய கவிதைதிருந் பொருளதனை கிணைக்க கிறபாம். 3

அன்னையத் தனுமாய்க் குருவுமாய்த் தேவ யாவரின் மாமுனிவன் மெய்யருளான், மன்னுகக் அவத்தைக யவளை ருணர்பரமநிலையே ஞானத்திடமுனே, மெய்ம்மையாகிமெ காண்மயா தியர்க்கும் பிறக்குமா வெடுத்தனன் பெயதின், தென்ன மாதவஞ்செய் திட்டேறுமைறைசை யெம்பிரான் புகழுரைத் திடற்கே. 4

சீரணி சடையா னிருமலன் வாதனிட்கள சகளமதினைத்தேவன், சேவடி கருணைத் திருவுரு வாகித் திருமறைக் காட்டெழுஞ் செல்வ, வீரடிக் கமலத் தாயுமா னவன்தனி ருக்தமிழ்ப் பெருமையெவர் னனவோ, பாரினிற் பதிமே லெடுத்தமா விடயம் பகருவ லினிதினிப்பாக. 5

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமத்

# தாயுமானசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய திருப்பாடல்களுள்

முதன் மூன்று பாடல்களுக்கும் உரை

## 1-வது பாடல்

### திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அங்கிங்கெ னாதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்

யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
  யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
  கருத்திற் கிசைந்ததுவே
கண்டனவெ லாமோன வுருவெளிய தாகவுங்
  கருதியஞ் சலிசெய்குவாம்.

இந்நூலாசிரியர் மேலே [2-வது பாட்டில்] "பெரியபொருளைப் பணிகுவாம்" எனவியந்து வாழ்த்துதல் செய்யும் இலக்கின் வியாபக முதலிய பலவற்றையும் தொகுத்து "முடித்து முடித்தல்" என்னும் உத்தியால் கூறுவான் எடுத்துக்கொண்டது இச்செய்யுளின் கருத்தாம்.

**அங்கு இங்கு எனாதபடி** என்பது:—அண்டபகிரண்டங்களாகிய சேய்மைக்கணுள்ளதெனவும், அன்றிப் பூமி பாதலங்களென்னும் அண்மைக்கணுள்ளதெனவும் கண்டித்துரைக்கப் படாமை.

இனம்பற்றி உங்கு எனவுங்கூட்டி அவற்றிற்கு இடைவெளியின்கணுள்ளதெனவு முரைக்க.

'என்னாத' என்பது 'எனாத' எனத் தொக்கு நின்றது.

**எங்கும் பிரகாசமாய்** என்பது:—மேல், கீழ், உள், புறம் அடி, பக்கங்க ளனைத்திலும் பரந்து நிற்கும் பேரொளியாகி,

**ஆனந்த பூர்த்தியாகி** என்பது:—அவ்வாறே யகண்ட பரிபூரணானந்தமாகி.

ஆனந்த பூர்த்தி—வடசொற் புணர்ச்சி யாதலின் இயல்பாயது.

**அருளொடு நிறைந்தது எது** என்பது:—தனது திருமேனியாகிய பேரருளொடு விபுவாயுள்ளது எப்பொருள்?

ஒடு உருபு "சுட்டிய விரண்டாம்வேற் றுமையொடு முற்றும்" என்றாற்போல ஒற்றுமைப்பொருட்கண் வந்தது.

அருள் ஆவது - அபின்னசத்தி; நிறைவு ஆவது - ஒழியாமல் முக்காலத்திலும் உள்ளதாகி, ஓங்கிப்போகாமல், குறையாமல், இடையறாமல், அசைவின்றிப் பரந்திருக்குந் தன்மை. இதனைப் பூரணமென்றும் விபுவென்றுங் கூறுவர். இந்நூலாசிரியர் மேலே "அண்டபிண்டமு மடங்க வொருநிறைவாகியானந்த மானபரமே" என்றும், "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணானந்தமே" என்றும் பலவிடங்களிலும் கூறிய வாறுணர்க.

அன்றியும், அங்கு - விடுபேறாகிய அம்மைக் கண்ணும், இங்கு - உயிர்வாழ்க்கைக் கிடமாகிய இம்மைக் கண்ணும், எனினும் ஒக்கும். இனம்பற்றி உம்மைக் கண்ணுமெனக் கூட்டியுரைக்க. எனவே, அண்டத்துவம் பிண்டத்துவ முதலிய அனைத்திடமுமா மென்பதுபெற்றும்.|| அவையாவன: பிருதிவியண்டம் புவலோகமுதல் சிவலோகமளவாக

ஏழுலோகமும், மேல் அண்டகடாகமும் பிரம்மாண்டமும், மேல் அப்பு தேயு வாயு ஆகாயங்களாகிய அண்டங்களும், மேல் மனம் புத்தி ஆங்காரம் குணம் ஆகிய அண்டங்களும் இவைக்குமேற் பிரகிருதியண்டமும், மேல்அராகம்வித்தை கலை நியதி காலங்களாகிய அண்டங்களும், மேல் அசுத்த மாயையும், அதன்மேல் சுத்தமாயையிற் சுத்த வித்தை மாகேச்சுரம் சாதாக்கியங்களும், அவைக்குமேற் பரவிந்து பரநாதங்களும், எண்பத்து நூறாயிரம் யோசனைகளுமுள்ள பூமியும், கனிட்ட பாதலமும், கீழே ஆடகேசரர்க்குப் புவனமாகிய ஏழு பாதலங்களும், கூர்மாண்டமென்னும் உருத்திர புவனமுமாய் அண்டகடாக மூடப்பட்ட புவனமும், இன்ன அண்டங்களனைத்திற்கும் ஆதார பூதமாய்ச் சிவ சத்தியான ஆதாரசத்திக்கும் அப்பாலும் சிவத்தின் பூரண அளவு எல்லைப் படாதாதலால்,

"ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்சோதி"

னவும்,

"அப்பாலைக்கப்பாலைப்பாடுதுங்காண்"

எனவும் பெரியருரைத்தவாற்றா னுணர்க.

அங்குள்ளது எனின் இங்கில்லதெனவும், இங்குள்ளது எனின் அங்கில்லதெனவும், அங்குள்ளது எனின் எங்கு மில்லதெனவும், எங்குமுள்ளது எனின் ஏற்றத்தாழ்ச்சியா யிருக்கின்றதெனவும் ஐயப்பொருட்கு இடமாகாமே "அங்கிங்

நிறைவுடையதுமெங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி'' என வற்புறுத்திக் கூறினர்.

அருவ மூர்த்த சித்துருவாகிய பதிக்கு அருளே திரு மேனி என்பதற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்திரம் 1. பாட்டு 47.)

''உருவருள்குணங்களோடு முணர்வருளுருவிற்றோன்றுங்
கருமமுமருளரன்றன் கரசரணாதிசாங்கந்
தருமருளுபாங்கமெல்லாந் தானருளுடனக்கொன்றின்றி
மருளுருவுயிருக்கென்றே யாக்குவனமலன்றானே.''

மற்றும் வருவனவற்றுங் காண்க.

தன் அருள் வெளிக் குளே என்பது:—அங்ஙனந்தனது அருளாகிய வெளியினிடத்தே.

கடவுளின் பொதுக்குணங்களெட்டில் ஒன்றாகிய பேர ருளுடைமையெனும் பெயரைக் கொண்டு ''அருள்வெளி'' என்றனர். இதே பரவெளி. சிதாகாசமென்பதும் சிதம்பர மென்பதும் அதற்கே பெயராம். இதினின்றும் அண்ட வெளி தோன்றி, யதினின்றும் மனவெளி தோன்றித் தோற்று முறையானே யொடுங்கும். மனவெளியென்பது மனம்விரிந்த இடம் அண்டவெளியென்பது ஒவ்வோரண் டத்தைச் சூழ்ந்திருக்கும் வெளி பரவெளியென்பது எல்லா வற்றையும் தன்னு ளடக்கியிருக்கும் வெளியாம்.

அகிலாண்ட கோடியெல்லாந்தங்கும்படிக்குளென்பது:— அனந்தகோடி அண்டபுவனங்களும் முற்றும் பரிணமித்து நிற்குமாறு.

**இச்சைவைத்து உயிர்க்கு உயிராய்த் தழைத்தது எது?** என்பது:— அருளாகக் கருதி இச்சையைவைத்து உயிர்கட்குள் உணர்வாகி விரிகின்றது எப்பொருள்?

அருள்வெளி என்பது தனது சந்நிதானமாம்; ஆகவே, தனது சந்நிதான மாத்திரத்தாலே எல்லாவுலகங்களுந் தோன்றி விரிந்து அடங்குமென்பதாயிற்று. தனது அருள் ஆதியிலொன்றாயிருந்து, பின்னர் இச்சை ஞானம் கிரியைகளாகி, முறையே மலத்தால் மூடப்பட்டுள்ள ஆன்மாக்களுக்கு அருள்செய்தற் பொருட்டுவைத்த கிருபையை "இச்சைவைத்து" என்றும், தனது ஞானசத்தியால் அவர்களது நலத்தைவிரும்பி அறிதலை "உயிர்க்குயிராய்" என்றும், கிரியாசத்தியால் அவர்களுக்குத் தநுவாதி பிரபஞ்சங்களைத் தருதலை "தழைத்தது" என்றுங் கூறினர்.

ஆன்மாவும் இச்சை ஞானம் கிரியைகளை உடையதாயினும் அவற்றை அவித்தியாகிய மலம் மறைத்து நிற்கும். மெய்ப்பொருளின் சத்திகள் ஒன்றாலும் மறைக்கப்படாமல் தான் அவற்றின் மூலமாக ஆன்மாவுக்குக் கன்மவினையால் போகாதிகளைக்கொடுத்து, அவற்றால் தாக்கப்படாமல் தன்னைத்தானே யறிந்து விளங்கு மியல்பிற்று. இதுவே அவ்விரண்டிற்கும் வேற்றுமை எனக்காண்க.

தன்து சக்திமாத்திரமின்றி யாண்டும் பிறிதோரிட மின்றாதலால் "அருள்வெளிக்குளே" என்று தேற்றப் பொருளிற் கூறினர்.

"இச்சையைத் துயிர்க்குபிசாய்த் தழைத்தது" என்ற தற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத் 1. பா 63.)

"மன்றதா யிச்சா ஞானக்கிரியையென்றொரு மூன்றாகி
நின் றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கரு ணைசமாகும்
என்றவா ஞானசத்தி ஞானயத் தறிவ னாதன்
அன்றருட் கிரியை தன்னா லாக்குவ னகிலமெல்லாம்."

தன் சக்தியின்கண் முத்தொழில்களும் நிகழுமென்ப தற்கு உதாரணம்:—

(திருவிளையாடற்புராணம், பாயிரம்.)

"பூவண்ணம்பூவின்மணம்போலமெய்ப்போதவின்ப
மாவண்ணமெய்கொண்டவன்றன்வலியாணைதாங்கி
மூவண்ணதன்சக்திமுத்தொழில்செய்யவாளா
மேவண்ணலன்னான்விளையாட்டினவினையையெல்லாம்.

மனவாக்கினில் தட்டாமல் நின்றது எது? என்பது:—
மனத்தான் இத்தன்மைத்தென நினைத்ததற்கும், வாக்கால் இன்னதென உரைத்ததற்கும் இயையா வண்ணம் அதீத மாய் நின்றது எப்பொருள்?

இனம் கோக்கிக் காயத்தாலும பற்றற் கமையாதெனவும் உரைக்க. இதனுல் திரிகரணமெனும் தத்துவ மூன்றற்கும் மேலாய் நிலைபெற்றன்னது அப்பொருள் என்றதாம்.

இந்திரி கரணங்களிலும் அப்பொருள் தங்கியிருக்கும் அப்படி தங்கியிருப்பதை புணராமலிருப்பதுந் தவிர, அஞ்ஞான விசேஷத்தால் தட்டுப்படாமலும் கூட விருக்கின்றதென்க.

உன்னென்கின்ற சங்கற்ப விகற்பங்களைச் செய்வதால் சலம் என்றும், இந்திரியங்களைப் புறத்தே விடயங்களிற் செலுத்துவதால் அசலம் என்றும் கூறப்பட்ட மனம் பிரகிருதியில் தோற்றம். சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நான்கு வாக்குகளும் விந்துவில் தோற்றம். இவையெல்லாம் பசு பாச ஞானங்களின் வழிப்பட்டு இயங்கிப் பின்பு பதிஞானம் மேற்பட்டெழும் எழுச்சியின்கண் நீக்கப் பட்டடங்குமாதலால், அவற்றில் "தட்டாமல் நின்றது" என்றார். இஃது நின்மலதுரியம். இந்நிலையின்கண் மனச்செயலும் வாக்கின் காரியங்களும் இல்லையாய் நிற்க, மேல் அவற்றினூடு செறிந்துந் தாக்கற்றதாய்ச் சிவம் அதீதமாகி நிற்கும், என்பதாம்.

வாக்கு நான்கனுள் சூக்குமை விந்துவினுள்ளே அரும்பும்; பைசந்தி இதயத்துள் மயிலின் முட்டையுட் சலம் போன்று மலரும், மத்திமை கண்டத்துள் சவிகற்பமாப் புணர்த்தக்க ஒலியாய்க் காய்க்கும்; வைகரி வாயினின்றும் செவியிற் கேட்கப்படுவதாய்ப் பொருள்தரு மொழியாய்க் கனிந்து வெளிப்படும்; இவை வாக்கின் உற்பத்தியாம்.

மனவாக்கு முதலியவற்றில் தட்டாதது என்றதற்கு உதாரணம்:—

[திருவிளையாடற்புராணம் நான்மாடக்
கூடலானபடலம்.]

"பூதங்க ளல்ல பொறியல்ல வேறு
புலனல்ல வுள்ள மதியின்
பேதங்க ளல்ல வினையன்றி நின்ற
வெளியென்ப கூடன் மறையில்
யாதங்க ளுறை வினாவித்த ஆதி
பகர்வானை யாயு மறிவே."

மற்றும் வருவனவற்றுற் காண்க.

மன வாக்கினில் தட்டாமனின்றதற்கு மற்றொரு பிரகாரமாக வுரைப்பினுமாம்; அஃதாவது:—மனம் - மானதக் காட்சியும், வாக்கு - (வேதம்முதலிய வாக்காகிய) நூல்களும். இவை முதலிய அளவைகளாலும் பற்றப்படாதது என்பதாம். வாக்கினிலும் என உம்மை விரிக்க.

"ஆகிலாசார தபோதன சின்புரு
வாசகாதீத மனோலய பஞ்சரன்."

என்றதனானுமுணர்க.

சமயகோடிகளெலாம் தம் தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது-

எது? என்பது:—பல்வேறு சமயங்களெல்லாரும் தமது தமது தெய்வமென்றும், எமது எமது தெய்வமென்றும் முறையிட்டு, எவ்வெவ்விடங்களினும் ஒருவரையொருவர் விடாதுபற்றி எதிர்த்து வாதித்திடுமாறும், அவ்வச் சமயங்களோறும் அவரவர்கடவுளராய் வீற்றிருப்பது எப்பொருள்?

எல்லாமென்பதில் உம்மை தொக்கது

'வழுத்திடவும்' என்றதால் அவரவரும் சிந்திக்கவும் வாழ்த்தவும் வணங்கவும் நின்றது எனவுணர்க.

பல்வேறு சமயங்களாவன:—லோகாயதம் பௌத்தம், சமணம், மீமாஞ்சை, மாயாவாதம், பாஞ்சராத்திரம், இவை புறச்சமயம், சைவம், பாசுபதம், வாமம், வைரவம், மாவிரதம், காளாமுகம், இவை உட்சமயம்; இன்னும் சுவலேக வாத முதலிய பலவுமாம்.

இச்சமயங்கள் பலவாறு வாதிக்குந் தொடர்பினைத்தும் கண்டுச் சொல்லப்புகின் வரையறைப் படாமையின் அவற்றுட் சில சிலவே சுருக்கி யெடுத்துக் காட்டுதும்.

உலகாயதன் பிரபஞ்சத்துக்குத் தோற்றமு மொடுக்கமு மின்றி அது தானே தோன்றி யழியும் எனவும், வேறொரு கர்த்தா அதனையுண்டாக்கிக் காரியப்படுத்த வேண்டுவ தில்லை எனவும்வாதிக்க, சித்தாந்தி அவைகளை மறுத்துரைப்பது.

பௌத்தரிற் சௌத்திராந்திகன் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம், ஆகிய பஞ்சகந்தச் சார்

புல் எல்லாத் தோற்றமென வாதிக்க. பிறிதொருவன் கருத்தாவன்றி ஒன்றுந் தோன்றாது என மறுப்பது.

காலமேயாதி காரணமே கர்த்தா என்று வாதிக்க. அதை மற்றொருவன் மறுப்பது.

நையாயிக வைசேடிகர் பரமாணுவிலே பரிணமித்த பிரபஞ்சம் அழிந்து பரமாணுவான பின்னும் ஆத்மாவின்கண் ஒத்துக் கூடாகப் பிரபஞ்சமாகத் தோன்றி நின்று அழிக்கிறதென்று வாதிக்க, ஆத்மாவும் அணுவும் அசேதனமாதலால் முறைப்படுத்துத் தாமாகவே தோற்றுவியாது அவ்வணுக்களும் பிரளயத்திலே அழியும் என்றும், இப்பிரபஞ்சத்திற்கு உபாதானகாரணம் மாயையே என்றும் வாதிக்க, மற்றொருவன் மறுத்துத் தனது கொள்கையை நிறுத்துவது. இங்ஙனம் பலவாறு வாதிக்கப்படுவனவும் மறுக்கப் படுவனவுமாம். இவை முதலியன சமயவாதிகளின் வழக்குகள்.

சைவத்திற்குத் தாண்டவமூர்த்தமென்னும் மூர்த்தியாயும், பாசுபதத்திற்குத் திருநீறுஞ் சடைமுடியுந்தரித்த மூர்த்தியாயும், மாவிரதத்திற்கு என்புமாலைதரித்த மூர்த்தியாயும், காளாமுகத்திற்குப் படிகமும் புத்திர தீபகமணியுந் தரித்த மூர்த்தியாயும், வாமத்திற்கு அக்கினியும் உபவீதமுந்தரித்த மூர்த்தியாயும், வைரவத்திற்குத் தமருகமுஞ்சூலமும் தரித்த மூர்த்தியாயும், பாஞ்சராத் திரத்திற்குச் சங்க முதலிய ஐம்படையுந்தரித்த மூர்த்தியாயும், சாக்தேயத்திற்குச் சத்திமூர்த்தியாயும், இன்னும் பௌத்தராதிகளுக்

குப் பௌத்தர் முதலிய மூர்த்திகளையும் வீற்றிருக்க, அவரவர் நினைந்த வடிவோடுஞ்சென்று, எண்ணியாங்கெய்தளித்தும், தேகாந்தத்தில் முத்தி பதங்கள் அருளியும் விளங்குவது. இஃதே அவ்வச் சமயங்களிலும் நின்றது என்பது அன்னணம் தமிழ்வேதமாகிய தேவாரத் திருவருட்பாவும் "ஆறொன்றிய சமயங்களினவ்வவர்க் கப்பொருள்கள் - வேறொன்றிலாதன" என மொழிகுவதுங் காண்க.

எங்கணும் பேரு வழக்காய் யாதினும் வல்லவொரு சித்தாகி உண்டாமாய் என்றைக்கும் உள்ளது எது? என்பது:—இவ்வாறு யாண்டும் அறாத பெருமையாயுள்ள வழக்காகி, எவ்வகைத் தொழிலினும் வல்லதாய், ஒப்பற்றசித்துருவாகி, பேரின்பவடிவாகி, எக்காலத்தும் நித்தியமாயிருக்கின்றது எப்பொருள்?

ஓரிடத்தும் ஒருகாலத்தும் ஒருவராலும் ஒருவாற்றானும் அவரவர் கொள்கைகளும், உத்தேசம், இலக்கணம் சோதனை இவை முதலியவற்றால் வாதிக்கப்பட்டும், அநுவதிக்கப்பட்டும், தோல்வி வெற்றிகளுண்டாய்ச் சிறிதும் ஒழிவு பெறுதல் அருமையாதல் பற்றிப் 'பெருவழக்கு' என்னப்பட்டது. ஒருபொருண்மேல் இருவர் மாறு கொண்டு செல்லும் வழக்குப்போலாது, இது அவரவரும் அங்கங்கு அவ்வக்காலத்துத் தத்தம்பல்வேறு கொள்கைகளை மேற்கொண்டு தொடர்வதாம்.

ஐவகைத்தொழிலும் வல்லது என்பது:—சிருட்டி-படைத்தல், திதி - காத்தல், சங்காரம் - துடைத்தல், திரோபவம் - மறைத்தல், அநுக்கிரகம் - அநுக்கிரகித்தல் என்னும் ஐந்தொழில்களும் வல்லமையுண்மை. எவ்வகைப் பட்ட தொழில்களும் இவ்வைந்தனுள் அடங்குமா றாய்ந் துணர்க.

இவை தூலம் சூக்குமம் காரணம் என்பவற்றால் மூவகைக் கூறும். அவற்றுள் மாயையினிடமாக உயிர்கட்குத் தநுகரணபுவன போகங்களைத் தருவது படைப்பாம்.

திதி—என்பது காத்து ரட்சிப்பதாம்.

சரணம்—சிவன் வித்தை சிவன் என மூவகைத்து விடயாதிகளை அழிக்குந்தன்மை சிவகரணமாம்.

உயிர்கள் போகங்களை நுகர்வதற்கு மூக்காலமாயும், அவற்றை நுகர்வினைக் கெடாப் அவசியுவதாயும், உயிர்கட்கு இச்சையாதி மூன்றனோடும் ஒழுப்பும் சார்பாயும், தன்னையும் விடயத்தையும் வேற்றுமை யறியவொட்டாமல் மயக்கச்செய்வதாயும் இருக்கின்றது வித்தியா கரணமாம்.

ஆன்மாக்கட் கிருவினையொப்பும்மலபரிபாகமும் சத்திநிபாதமும் வருவித்து அவற்றை முத்தியிற் சேர்ப்பது சிவகரணமாம்.

வித்யாகரணத்தைப் பொருந்தி நடத்தும் புவனங்கள் இரு நூற்றிருபத்து நான்காம்.

போகங்களாவன:—சிவிகை குடை தேர் யானை குதிரைகளும், அறுசுவை மாதர்கீதம் முதலியனவுமாம்.

இவைகளுக்குச் சரீரத்தையும் கரணத்தையும் யானென்றும், புவனபோகங்களை எனது என்றும் உயிர்கள் கருதச் சுகாதிகளை யநுபவிக்கச்செய்தல் காத்தலாம்.

உயிர்களால் காணப்பட்டவற்றை நீக்கல் அழித்தலாம்.

இவற்றுட் பலகாலுழன்றும் வெறுக்காமல் புசிப்பித்தல் திரோபவித்தலாம்.

பின்னர் நித்தியமும் அநித்தியமுமாகிய பொருள்களைப் பகுத்துத் தெரிவிப்பது அநுக்கிரகித்தலாம்.

இங்ஙனம் எண்பத்து நான்கிலக்க பேதமான உடல்களினிடத்தே பரமகர்த்தா ஐந்தொழில்கள் செய்வது தூலமென்றும், அந்த வுடலில் அவத்தைக் கருவிகளில் ஐந்தொழில்கள் செய்வது சூக்குமம் என்றுஞ் சொல்லுவர்.

காரண பஞ்சகிருத்தியம் குருமுகமாக வழிபட்டுக்கேட்டுச் சிந்தித்துத்தெளிந்து நிட்டைகூடி அநுபவிக்குவதாகலான், அம்முறையை அவ்வாறு உணர்ந்து கொள்ளத்தக்கது. இவ்வண்ணம் எல்லாம் வல்ல சத்தும், சித்தும், இன்பமும் தானேயாம்.

இங்ஙனம் சத்து, சித்து, ஆனந்தமாகிய தனக்குச் சச்சிதானந்த னெனப் பெயராம்.

"பெண்ணுறக்குமுன்னது" எனவே அப்பொருளில்லாத தன்மையின்மை யென்றாயிற்று.

**மேல் கங்குல் பகல் அறநின்ற எல்லை உளது எது?**
என்பது, சத்திநிபாதத்தின்கண் இரவும் பகலும் இல்லை யாக நின்றதொரு நிலைக்களத்தே தானேயாயுள்ளது எப் பொருள்?

'மேல்' என்பது வினை ஒப்பு மல பரிபாகத்துக்கு மேற் பட்ட இடம். அதுவே சத்திநிபாதமாம்.

'ஆன்மா' பசுவின் ரூபத்தியையும் தேசபோகப்பற்றுக் களையும் முற்றத்துறந்து பிறிதொரு பயனையுங் கருதாமல் தத்துவங்களைச் சடமென்றறிந்தகற்றுமாறு; சத்தும் அசத் தும் பகுத்துணர் சத்தாயது ஆன்மாவென்றும், அவ்வாறு அம் பகுத்துணர்ச்சியைக் காட்டுவது அருளென்றும் உள்ளுணர்ந்து, அவ்வருளைப் பற்றுதலாலும், கட்டையிற் பெயராது நிற்றலாலும், முன்றோதிய மாயை கன்மங்களுக்கு இடமாகிய சகலாவத்தை யையும் ஆணவத்துக்கிடமாகிய கேவலாவத்தையையும் நீங்கி னோர் இடமாகிய சுத்தநிலையின்கண்போதந் தெதிர்க்கோன்றுமல் நிற்க. பலகோடி சூரியர் கூடித் தொகுத்து தோன் றினாற்போல சிக்கறநிறைந்த வொளியாய்ச் சடங்கறக் கனின் உள்ளும் புறம்புமாகிப் பூரண சிவமயமிட்கண தொரு பமாக எங்கெங்கும் பரந்து விளங்கும். இச்சுத்த நிலையே இராப்பகலற்ற இடமென்றும், மறப்பு நினைப்பற்றவிட மென்றும், இன்னும் பலவாறாகவும் பெரியோர் கூறுவர்.

இவ்வெல்லைக்கண் மேலீடாய் நின்ற திருவருட் போதத்தையும், சிவத்தையும் எதிரிட்டுக்காணும் தற்போத நீக்கிச் சிவயோகமெய்துதல் முத்தான்மாக்கட் கியல்பென வேதாகமங்கள் கூறுவனவாம்.

இவ்வெல்லையே தாதநெறி முதலிய நான்கு நெறிகளுள் சன்மார்க்கநெறியாய், மகாமலப்பிணிப்புக் கட்டறுந்து சிவானந்தப் பெரும்பேறு மருவிப் பாச இரிவும் பதிவிற் புகறுமின்றி ஒருநிலையாம் இயல்பு.

இதுவே ஞானவரம்பும், மௌனாம்பரமும், பேசாவநுபூதி பிறந்தவிடமுமாம். (உதாரணம்.)

(கொன்றைவேந்தன்.)

"மௌனமென்பது ஞானவரம்பு"

(கந்தரநுபூதி.)

"தூசாமணியுந்துகிலும்புனைவா
ணேசாமுருகாநினதன்பருளா
லாசாநிகளந்துகளாயினபின்
பேசாவநுபூதிபிறந்ததுவே."

மற்றும் வருவனவற்றுற் காண்க.

தனக்கு வழித்துணையாகக் குடும்பபாரம் தலைக்கொண்டு அதன் பாதுகாப்பினுளேக்கத்தால் செகிக்கால மறிவுகரு

கீ, இனி - மக்களைத்திக் பாண்டி ஒர் கைக்கூடப் பெறுவ னென் செல்வமும் அன்னையர்க்கு கொக்கி யிருக்குமவன். தன க்குள் வல்லியோரும் தாக; ஒருகளிப்ப வீருந்தால்கொப்பிய துர்யோதன பெறிப்பட்டு வணங்கிக் குறையிரந்ததும், அவ்வேழுனிவன், "அந்தவேனை அதனையாற்றுன் அக் காலக் கெனலுறியாயின் அக்கணாதிபதி தயவிலும் கை கொடாதுவை" என வசனித்து வழிப்படுத்த, தானும் மக் முனிவரனைப் பணிந்து வழிக்கொண்டு, இடையிலுள்ளபல வனங்களையுடந்து மலை காடு யாறு கைக்கொதிகள் யாவும் கடந்து அரிதிற் கடந்து சென்று அக்கணிகொல்லைக் கண்டதும், ஆங்கென்ன செல்வக்கிளர்ச்சியை நோக்கி கோக்கி வியந்து, அக்கரையடைந்து, மந்திரத் திலை ஓத விநாயகமாலையைக் கண்டுவுற்றி, அவன் தயவுபெற்று, அவன் அருகிய வொ திக்கின்று சீமையும் பெற்றெனுனி அவ் வல்லியன்றுக்காவல், கோட்டிலின்று வளிய எல்லையை நோக் குகின்றதும் இதுதொடக்கியன்றே மக்குக் கடைசியப் பெருமையடைவித்தன்று அதன்பெருமையைக் கருதி அவ் வெல்லையையும் வந்தித்தல் செய்வாரும்.

இக்கருத்தேபற்றிப் பெரியோர் சொல்லிமுதலிய திருப் பதிகட்டொறு மெய்யியல்கால் அந்தணர்களின் திருவெல்லை யையுமன்னர் வணங்கு வியக்கை அருமாபுராணத்தோறும் புராணர்த்தர் கூறியிருப்பது. அக்குறை பிறழ்வின்றி, முத்திபெறன்னோர்க்கும் முத்திப்பதிக்கும் அணுக்கமான

அநுசந்தானமுன்னதால், "எல்லை புணரு" என அச்சுதிப் புன்மை புலப்படுத்தலான் ஆசிரியரும் போற்றினர் போலும்.

"அது எருத்தற்கு இசைந்தது" என்பது:—அவ்வாறு மெய்ப்பொருளுணர்ச்சியே பதியுர்க்கும் பசுவுர்க்குமவரின் கருத்திசைந்திருக்கும் ஒப்பமுடைத்தது.

"அதுவே கண்டன எலாம்" என்பது:—அம்மெய்ப்பொருளே தலைவர்களாற் காணப்பட்ட பூதபௌதிகங்களாகிய விடய பதார்த்தங்கள் அனைத்தும் ஆதலால்,

இங்ஙனம் அனந்த நிலையில் காணப்படுகின்ற உருவமாய் ஆகவே கந்த நிலையிற் காணப்படும் உருவமும் ஒன்றாய் உண்டென்பதாயிற்று. இக்கருத்தினைமேற்கூறிய திருவருளையே கண்ணுகக்கொண்டு யாண்டுங் காணப்பட்டவனைத்தும் சிவமேயாகவும், பிறிதொன்றின்றாகவும் காண்பதாம். உதாரணம்:—

"கனிதூங்கால்மெய்ம்மேற் கடைபக்கமெய்க்கும்
இலமொழிய வேதிம்மைதீர்."

என்பதனாலும்,

"பரப்பனவெல்லாம் பரமாயறிதல்
சிற்பரசோதியுடையோர்க்கிதுவே."

என்பதனாலும்,

சிவஞானசித்தியார், சூத்-8. பா-80.

"அறிவரிய வறிவகத்தி லறிவி னுள்ளே
அறிவுதனை யருளினா லறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங் களோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகிற்
பிரியாத சிவனுனைப் பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தானாய்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னாயே."

என்றதனால் வருவனவற்றானுங் காண்க.

"மௌனகுரு வெளியது ஆகவும் கருதி அஞ்சலி செய்வதும்" என்பது:—அம்மெய்ப்பொருளை மௌனரூபமான வெளியிடமாகவும் தியானித்துக் கைகூப்பி வணங்குதல் செய்வோம். எ-று.

"வெளியது" என்பதில் "அது" பகுதிப்பொருள்விகுதி. "வெளியதாகவும்" என்றதால் எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி ஏகமெனும் நிறைந்ததாகவும், இச்சைக்கு அயிர்க்குயிராய்த் தழைத்ததாகவும், தட்டாமனின்றதாகவும், வழக்கிடைவின்றதாகவும், என்றைக்கும் உள்ளதாகவும், எல்லையுளதாகவும், அதுவே கண்டன வெல்லாமாகவும், தனித்தனிக் கருதி அஞ்சலிசெய்குவோம். அன்றியும் கையிற் கூடியதாகவும் கருதி அஞ்சலிசெய்குவோம் எனவும் உரைக்க.

இவ்வாறு கூறியவாற்றான் ஆசாரங்க ளனைத்திற்கும் அதீதமாகிய நிராதாரப் பரமகுருவை[தக்ஷிணாமூர்த்தியை] அஞ்சலி செய்தமை கண்டுகொள்க.

அதுவன்றி இந்நூலாசிரியர் தாம்சொல்லப்புகுந்த சுருதி குரு அநுபவங்களையும் அவற்றின் பயனையும் அருட்சார்பாய் நின்று ஒருவாற்று ணுணர்ந்தவராகிய இந்நூல் இனிது முடிதற் பொருட்டு "ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்" என்னுந் தொடர்நிலைக்கண் "எண்குணமுங்காட்டி" "சௌபான பஞ்சகங்காட்டி" மந்திரஞ்சிகை சோதிடாதி மற்றங்க நால்வகை மௌனமோலி யயர்வறச் சென்னியில் வைத்தாசாரங்கடந்தி லமர்ந்தனை வைதிக சைவமழகிதந்தோ!" இதுவன்றித் "தாயகம் வேறில்லை இல்லை" அருளைக் காட்டத்தக்க நெறியிக் கெறியேதான் சன்மார்க்கம்" என்றும், சின்மயானந்தகுரு என்னுந் தொடர்நிலைக்கண் "சித்தாந்த முத்தி முதலே" என்றும், இன்னும் பலவிடங்களிலும் பழிச்சுதல்செய்தபடி இவ்வாசிரியர்க்கு வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தமே சிறப்புடைத்தாதலால் அஃதொன்றே உடன்பாடென்பது பெறப்படுகின்றது.

சிவஞானசித்தியார், சூத்-8. பா-15. 16.

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்புநூலா

நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்.''

''சித்தாந்த தேசிகன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பதமலர்க்கீழ் வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி.''

“மௌன உருவெளி” என்பதிற் * குடிலை ஆகிய மூல மநு † வினின்றும் சிவம் சத்திகளின் திருநோக்கத்தால் வெளிவந்தருளிய முதற்கடவுள் என்பதும் அமைந்து கிடத்தலின், தொல்லோர் வழக்கின்படி நாமும் மெய்ப் பொருளே அம்முதற் கடவுளாகவும் கருதி அஞ்சலிசெய் தனர் என உரைத்தலு மமையும்.

யோகிகள் மூலமந்திரத்தை மௌனாக்கரமென்றும் மூங்கை எழுத்தென்றுங் கூறுவர். உதாரணம்:—

* பிரணவம். † மந்திரம்.

திருமந்திரம்.

"ஊமையெழுத்தொடு பேசுமெழுத்துறி
னாமையகத்தினி லஞ்சமடங்கிடு
மோமயமுற்றது வுள்ளொளிபெற்றது
நாமயமற்றது நாமறியோமே."

முதற்கடவுளாகிய மூத்தபிள்ளையார் மூல மநுவினின்றும் வெளிவந்தருளிய வரலாற்றை விநாயக புராணத்திற் கண்டு கொள்க.

அன்றியும், இந்நூலாசிரியர் மேலே "மௌனகுரு வணக்கம்" என்னுந் தொடர்நிலைக்கண் "மூலன்மரபில் வரு மௌனகுருவே" என்று தமது ஆசிரியரை வழிபடுகின்றாராகலின், அத்துணை வியப்பு வாய்ந்த சிவமே தம்மையாட் கொள்வான் திருவுளங்கொண்டு மேற்கூறிய திருமூலநாயனார் மரபிற் குருவடிவாய் எழுந்தருளிவந்து தமக்குப் பந்தமோசனஞ் செய்வித்தமையை யுட்கொண்டு, அவரை ஈண்டும் வணங்குதல் செய்தபடி என்பதுங் காண்க.

இங்ஙனம் குறிப்பாற் பொருளுணர்த்துவது உள்ளுறையணியாம்.

திருமூல நாயனார் ஸ்ரீ கயிலாயத்திலே ஸ்ரீ நந்திதேவரது அருள்பெற்று அணிமாதி அட்ட சித்திகளிலும் வல்ல சிவயோகியார். அகத்திய முனிவர்பாலுள்ள நட்பினால் அவருடன் சிலநாள் வசிக்கவேண்டிக் கயிலையினின்றுங் காசி சிதம்பர முதலிய அங்குள்ள தலங்களைத் தரிசித்து வந்து, திருவாவடுதுறைக்கண் பரமசிவத்தைப் பணிந்து,

அத்தலத்தின்கண் வசிக்கவிரும்பிக் காவிரிக்கரைச் சார்பிலுள்ள வனத்தில் வரும்போது, அங்கு தம்மை மேய்த்திருந்த அந்நகரிற் காலஞ் சென்றுவிட்ட மூலன் என்னும் பெயருள்ள வேளிடையனைச் சூழ்ந்து கதறிக் கொண்டிருந்த பசுமந்தையைக் கண்டிரங்கி, அவற்றின் றுயர் நீக்கற் பொருட்டுத் தமது யாக்கையை ஓரிடத்திற் சேமித்துவைத்து, அவனுடலிற் பிரவேசித்துப் பசுக்களையன்று முழுதும் மேய்த்து, பின்பு அதனதனிடங்களில் அவற்றைப் போக்கி, கணவனிறந்தது தெரியாத இடையன் மனைவியழைக்கவும் மறுத்துவிட்டு, தாம் சேமித்து வைத்தவிடத்திற்போய் பார்க்க தமதுடல் அங்கில்லாமை கண்டு அது பரமசிவத்தின் அருளென் றுள்ளுணர்ந்து, தாம் பிரவேசித்த யாக்கையொடு சென்று, ஆவடுதுறைக்கண் பரமசிவத்தைத் தரிசித்து, கோயிலின் மேற்பாலுள்ள அரசமரத்தினிழற்கணமர்ந்து ஆகமங்கள் கூறுகின்ற சரியையாதி நான்கு பாதங்களையும், ஆண்டுக்கொரு பாசுரமாக மூவாயிரத் திருமந்திரஞ் சொல்லி யருளினர். அவரது திருமரபிற் றோன்றிய மௌனகுரு சுவாமிகளின் மரபினரே இந்நூற் கருத்தராகிய தாயுமான முனிவர்.

"என்றும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்ததும்" "இச்சை வைத்து உயிர்க்கு உயிராய்த் தழைத்ததும்" "மனவாக்கினிற் றட்டாமல் நின்றதும்" "எங்குந் தொடர்ந்து எதிர்வழக்கிடவு நின்றதும்" "யாதினும் வல்ல

வொரு சித்தாகி இன்பமாய் என்றைக்கும் உள்ளதும்" கற்
ருல்பக லறகின்ற எல்லை புனதும், ஆகிய இவ்வுறவகைத்
தன்மைத்தாய பொருளென்றே பேருயத்தழுத்தினசிவன்மு
த்தர் கண்டனவெல்லாமாகுமாதலின், அதனை "மௌனகுரு
வெளியதாகவும் கருதி பஞ்சலிசெய்குவாம்" என முடிக்க.

இவ்வாறனையும் வாய்பாசெனக்கொண்டு தான்முகத்
தில் "பரிபூரணானந்தம்" என்னும் தொடர்நிலை முதல்
"சிற்கனோதய விலாசம்" என்ப இறுதியாகிய பன்னிரு
தொடர் நிலைகளினும், அதன் வியாபக இலக்கணங்களை
ஒவ்வொன்றிற் கிவ்விரண்டாக ஒருவாறு குறிப்பித்து, அம்
மெய்ப்பொருளைப் பழிச்சல் செய்கின்றுரென்க.

அப்பன்னிரண்டின்மேற் கூறும் "சிதம்பர ரகசியம்"
என்னும்தொடர்நிலையில் வந்துள்ளனயாவும், ஏனைத்தொ
டர் நிலைகளில் அதனைச் சார்ந்த பன்னெறிகளுங்கூறினர்.

அம் மெய்ப்பொருள் இவ்விதத் தன்மைத்தாம் விளங்கு
வதென்று நயன்றதால் இதுபொருட்டன்மையமி. பொ
ருள்வகை பின்னர்க் கூறுதும்.

இறைவன் ஆன்மாக்க ளுய்யும்பொருட்டுக் கடாக்ஷித்த
ருளிய வேதாகம நெறியைப் பற்றுதார்க்கன்றி, அந்நெறி
யைப்பற்றியவழி உளதாகும் தத்துவஞான முடையார்க்கு,
நியான சமாதிகளாற் சிவன் முத்தத்துவப்பேறு கைவந்
ன்ன தாயுமானமுனிவர், தமது ஸ்வானுபவத் தேர்ச்
சியை ஒருவாறு புலப்படுத்துவான் எடுத்துக்கொண்ட இம்

முதற்செய்யுள், சொற்கள் வாளா விரியாமையும், பொருண்கள் விபரீத ஐயங்கட் கிடமாகாமையும், சிரவணஞ் செய்வார்க்கு இன்பந்தருமையும், சிறிய சொற்களுடைமையும், சந்தச்சுவையுடைமையும், ஆழியகருத்தைக் கொண்டிருக்கையும், காரண காரிய முறைகளை யுடைமையும், சான்றோர் ஆட்சியோடு மாறுபடாமையும், சிறப்பாகியபொருட்பேற்றைப் பயத்தலும், உதாரணமுடையதாதலும் ஆகிய பத்தழகோடுங் கூடி நிற்கின்றது காண்க.

---

## 2 - வது பாடல்.

ஞானந்தம்பெற்ற பேரானந்தஞ்சுற்று
முதல்வனந்தம்வினையிறு
உடலனந்தஞ்செயும் வினையனந்தங்கருத்
தேவனந்தம்பெற்றபேர்
சீரனந்தஞ்சொர்க்க நரகமுமனந்தந்
தெய்வமுமனந்தம்பேதந்
திகழ்கின்றசமயமு மனந்தமதனுண்ஞான
சிற்சத்தியாலுணர்ந்து
காரணந்தங்கோடி வருடந்தனைவன்பர்
கண்ணுள் விண்ணுக்கீதக்கவே
கருதரியவானந்த மழைபொழியுமுகிலைக்
கடவுளைத் துரியவடிவைப்

பேரானந்தப்பேறு மறையவர்க்கருஞ்செல்வம்
பெரியபெம்மானைத் தில்லைப்பைப்
பேசருமனைத்தடைய ஞானவானந்தமாம்
பெரியபொருளைப்பணிகுவாம்.

"ஜீவரோ அனந்த (பேதம்)" என்பது:—ஜீவர்களோ அளவில்லனவாகிய பேதங்கள்;

பல்லாயிரகோடி அண்டங்களிலும் செய்மை அணிமை யிலிருந்து பலவேறு வகையாய் அளவில்லனவாய் உள்ள ஜீவர்களாம்.

"பெற்றபேரோ அனந்த (பேதம்)" என்பது:—அவை கொண்டுள்ள பேர்களோ அளவில்லனவாகிய பேதங்கள்;

மேற்கூறிய ஜீவர்கள் பலவற்றுள்ளும் தோன்றும் தேகங்களுடையும் பேர்களோ அளவில்லனவாகிய பேதங்களெனி னுமமையும்.

"சுற்றும் உறவோ அனந்த (பேதம்)" என்பது:—தேகி களைச் சூழ்கின்ற உறவினர்களோ அளவில்லனவாகிய பேதங்கள்;

உறவினராவோர் ஒருவரை யொருவர் சூழ்ந்து சுற்றியி ருப்பதால் 'சுற்றுமுறவு' எனப்பட்டனர்.

'சுற்றும் உறவு' என்றதால் அளவில்லனவாகிய பகை யும் நொதுமலும் கூட்டி யுரைத்துக்கொள்க. உறவினர்க ளாவன:—மனைவி, மக்கள், தாய், தந்தையர் முதலிய பலர்.

"வினையினால் உடலோ அனந்த (பேதம்)" என்பது:— வினைகள் காரணமாகத் தோற்றும் உடல்களோ அளவில்லனவாகிய பேதங்கள்;

'வினை' நல்வினை தீவினையென இருவகையாம். வினையின்றித் தேகமெடுப்பதில்லையாதலால் 'வினையினால் உடல்,' என்றனர்.

உள்ளம் முதலியவற்றின் விகாரமே இருவினைக்குங் காரணம்; அவ்வினைகளே பிறப்பிறப்பிற்குக் காரணம்; இவை மேல் நடு கீழ் ஆகிய மூவுலகத்திலும் தோற்றிச் செல்வனவாம். தரு எண்பத்து நான்கிலக்ஷ யோனி பேதமென வரையறுக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு பேதத்திலும் எண்ணிறந்த உடல்கள் தோன்றி அழிவனவாதலால் 'உடல் அனந்தம்' என்னப்பட்டது. தரு எண்பத்துநான்கிலக்ஷ யோனிபேத மென்பதற்கு உதாரணம்.

மெய்ஞ்ஞானசித்தியார்.

"அண்டசஞ்சுவேதசங்க ளுற்பிச்சஞ்சராயுசத்தோ
டெண்டருநாலெண்பத்து நான்குநூறாயிரத்தா
லுண்டுபல்யோனியெல்லா மொழித்துமானுடத்துதித்தல்
கண்டிடிற்கடலைக்கையா னீந்தினன்காரியங்காண்."

"செயும் வினையோ அனந்த (பேதம்)" என்பது:—அவ்வுடல்களோடு கூடியவுயிர்கள் செயுஞ்செய்கைகளோ அளவில்லனவாகிய பேதங்கள்;

நுதல், நுதலவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், நம்பல், பயிறல், பயிற்றல், பொருந்தல், பொருத்தல், நட்டல், உழுதல், உழுதலவித்தல், காத்தல், அழித்தல், விரும்பல், வெறுத்தல், எதிர்த்தல், கன்றுதல்முதலிய பல வேறுவகைப் படுவனவாம். மனமின்றி மாறுமனவாம் செய்வினைக ளனைவுபடாமையின் அனைத்துமாயின.

“சுருத்தோ அனந்த (பேதம்)” என்பது:—தேகிகள் பலவாறு கருதும் எண்ணங்களோ அளவில்லனவாகிய பேதங்கள்;

அவற்றை விண்டு விரிக்கிற் பெருகும். தேவாரத் திருவருட்பாக்களிற் பரக்கக் கண்டுகொள்க.

“உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பதுகோடி நினைந்தெண் ணுவன”

என்னும் ஔவையார் வாக்காலும்,

“ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல”

என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் இயற்றிய விருத்தியாலுங் கண்டுகொள்க.

செய்யுஞ் செய்கைகள் தொழிலவயவங்களாலாம், கருதும் எண்ணங்கள் மனநிலையத்துக் கரணங்களாலாம்.

இவ்வினைகளுங் கருத்துகளும் யோகமுயற்சியையும் அக்கருத்தையு நோக்குங்கால் பயனில்லனவாய்க் கழியும்.

"பெற்றபோர் சீரோ அனந்த (பேதம்)" என்பது:—பெற்கூறிய வர் முதலியவற்றைத் தத்தம் வினைக்கீடாய்ப் பெற்றவர்களது செல்வமுதலியவைபோ அளவில்லனவாகிய பேதங்களாம்;

செல்வ முதலியவற்றின் எதிராகிய வறுமை முதலிய பேதங்களுங்கொள்க.

"சொர்க்கமோ நரகமுமோ அனந்தபேதம்."

என்பது:—(தேவர்கள் அல்லல் வந்தத்திலடையும்) முத்தி பதங்களும் நரகங்களும் தனித்தனி அளவில்லனவாகிய பேதங்கள்;

சொர்க்கநரகங்கள் புண்ணியவிருத்தியாலும் பாவவிருத்தியாலும் அடையப்பட்டவையாம்; ஆகவே, இவ்வாறியகன்ம பூமி அவ்விரண்டினையும் சமமாக அநுபவிக்கும் இடமென்பது காண்க.

சொர்க்கங்களாவன:—இந்திரன் முதலிய இறையவர் பதங்களாம்.

நரகங்களாவன:—கனிட்ட பாதலங்கட்கும், அசுரகண்டம் சர்ப்பகண்டம் இராக்கதகண்டம் இவை ஒவ்வொன்றும் மும்மூன்றுடன் எழு பாதலங்கட்கும் கீழே அமைந்துள்ள இரௌரவம், கும்பிபாகம், அபிசம் முதலிய அநேக பேதங்களாம்.

செய்கையுங் கருத்து மளவில்லனவாதலின் அவற்றாலடையும் பலனாகிய சொர்க்கநரகமு மளவில்லனவாம்.

"நற்றெய்வமுமோ அனந்த (பேதம்)" என்பது:— (அவரவர்களும் பூசிப்பதப்போற்றி அங்கங்கும் வழிபாடு செய்யும்) நன்மையுள்ள தெய்வங்களோ அளவில்லனவாகிய பேதங்கள்;

தம்மை வழிபடுகின்றார்க்கு இயன்றவாற்றாற் பேற்றை யளிக்கின்ற உண்மைநோக்கி 'நற்றெய்வம்' என்றார்.

பரமார்த்தமாய தெய்வம் ஒன்றேயாயினும் ஜீவர்கள் பல வேறுவகையாகியும், அவர்கள் மனோவாக்குக் காயங்களால் அர்ச்சிக்கும் கர்மம் அளவிலாப் பேதங்களை யுடையனவாகிய விருக்கையால், அவ்வவற்றிற்கேற்பச் சுகதுக்கங்களை யூட்டு நிமித்தம் பகவான் திருவிளையாடலாக அனந்தகரும காண்டங்களை நியமித்து அனந்த வுருவங்களைக் கொண்டிருத்தலால் 'தெய்வமுமனந்தம்' என்றார்.

"திகழ்கின்ற சமயமுமோ அனந்த (பேதம்)" என்பது:- (முடிவுபெறாமல் அங்கங்கும்) விளங்காநின்ற சமயங்களுமோ அளவில்லனவாகிய பேதங்களாம்;

அவ்வச் சமயங்களும் வாதிக்கப்பட்டு ஒழிவு படாமல் அனந்தமான அளவைகளைக்கொண்டு நிற்கின்றன; ஆதலால், "திகழ்கின்ற சமயமும்" என்றார். உதாரணம்;— அவிரோதவுந்தியார்.

"ஒன்றோடொன்றொவ்வா மதங்களொன்றினும்
பொருந்தவில்லேய வுந்திபற
பொய்யென்பதெத்தனைநாளுந்திபற."

பூர்வத்திற் சமயங்க ளறுவகையா யிருந்தன. உதா ரணம்:—

திருமந்திரத் திருவருட்பா,

“ஒன்றதேபேரூர் வழியதற்காறுள
தென்றதேபோலு மிருமுச்சமயங்க
ணன்றிதுதீதிது வென்றுரைமாக்கள்
குன்றுகுரைத்தெழு நாயையொத்தாரே.’,

என்பதனாலும்,

“முதலொன்றானை முழவுடன்வாளுந்
திதமுறுசெம்பு செவிநுழைக்கைகொண்
மதிபடைத்தக்கர் வகைவகையார்த்தே
யதுகூறுமொன்றொக்கு மாறுசமயமே”

என்பதனாலு மறிக. இவை அகச்சமயமெனக் கொள்க.

பிற்காலத்தில் இச்சமயங்களினின்றும் பலவேறுவகைப் புறச்சமயங்கள், அகப்புறச்சமயங்கள், புறப்புறச்சமயங் கள் முதலிய வறுபத்தியாறி யொவ்வொன்றினின்று மனேக சமயங்களுண்டாகி யிருத்தலான் ‘சமயமு மனேகம்’ என்றார்.

தெய்வபேதமும் சமயபேதமும் இற்றென முன்னருரைக் கப்பட்டன.

“அதனால்” என்பது:—(இங்ஙனம் மேற்போந்த வேர் முதலியவைகளின் ஒவ்வொன்றின் பேதங்கள் எண்ணில் அடக்கரியனவா யிருக்கும்) தொன்மையினாலே,

"ஞான சிற்சத்தியால் உணர்ந்து":—என்பது:—ஞானமே திருமேனியாகவும் உயிருக்கு ஒளியாகவு மிருக்கும் சிற்சத்தி யருளால்மேற்கூறியவிடயங்களையும் இனிச்சொரூபத்தையும் பாகுபட்டா வறிந்து.

அநாதியே ஆன்மாவை இருவகை மறைப்புக்களாய் விஷய சொரூபங்களை மறைத்துள்ளது ஆணவமலமாம். ஆணவத்தினிலக்கணம் சித்தியாரிற் றெற்றெனக் காண்க.

உயிர்க்குப் பரிபாகமேறுமளவன் தநுகரணாதிகளைக் கொடுத்து முன்னர் விடயமறைப்பை நீக்கவும், பின்னர்ச் சுருதியாற்சொரூப மறைப்பை நீக்கவும் அவ்விருவகைஞானங்களையுந் தருவது அருட்சத்தியே யாகலிற் 'சிற்சத்தியா லுணர்ந்து' என்றது.

எனவே, அவ்வுயிர் உணர்த்த உணரு மாத்திரையேயன்றித் தனக்கென வேறொரு சுதந்தர மில்லாததான சிற்றறிவினதா மாகலான் அவ்வாறு கூறப்பட்டது. கூறிய சித்தா சித்தப்பொருள்களை அருண்முன்னிட்டறிந்து என்பதாம். இவ்வாறுணர்தல் சீவன் முத்தத்துவமாம். உதாரணம்;

அவிரோதவுந்தியார்.

"பத்தித்திருமுத்தி பாலுவுடைத்தனைத்
தொத்தியருமுன துந்திபற
சுதந்தரமிலையென் றுந்திபற;"

(சிவஞானசித்தியார், சூத் - 8. பா—28.)

"சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யுடற்சோதி தோன்றுமாபோல்
ஆரியனா மாசான்வந் தருளாற் றோன்ற
அடிஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத்
தூரியனுஞ் சிவந்தோன்றுந் தானுந் தோன்றுந்
தொல்லுலக மெல்லாந்தன் னுள்ளேதோன்றும்
தெரியனுப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கும்
நின்றநிலை யெல்லாமு நிகழ்ந்து தோன்றும்"

"கார் அனந்தம் கோடி வருட்டித்தது என" என்பது:— அளவில்லாவரிய மேகசாலங்கள் ஒருங்குசேர்ந்து ஏககா லத்தில் இடையறாமற் பொழிந்தனபோலு மென்னும்படி,

"அன்பர் கண்ணும் விண்ணும் தேக்க" என்பது:— அன்பர்கள் கண்களும் ஆகாசமும் ஞானாகாயமுந் தேக்கு மாறு.

"கருதரிய ஆநந்தமழை பொழியும் முகிலே" என்பது:— நினைத்தற் கியையாத ஆனந்தப் பெருமழையை விடாது பொழியாநின்ற சிவமைந்தராய முகிலே.

"அன்பர் கண்ணும் விண்ணுந் தேக்கப்" பொழிமான ந்தமழையை யேனையோர் மனத்தினுலெண்ணு மதித்தற் கரி தாகலான் "கருதரிய" வென்றார்.

சம்வர்த்தம் முதலிய எழுமேகங்களும் மணி முதலிய வன்றி ஆனந்தமழையைப்பொழியமாட்டாவாகலானும்இது அளவு போலாது கருணைமழையைப் பொழிவ தாகலானும், இம்மழை பொழியக்கண்ட அன்பர்க்கு ஒரு வினையுமுண் டாய்ச் சலியாதாகலானும். "கருதரிய ஆனந்தம்" என்றார்.

இவ்வாறு வருவது அற்புத உருவக அணியாம்.

கைம்மாறு எதிர்பாராது நீரைச்சொரிந்து உலகுயிரைக் காக்கும் மேகம்போல அருள்மழையைப் பொழிந்து ஆன்மகோடிகளை வீடேற்றலால் "முகில்" என்றார்.

"நம் கடவுளே" என்பது:—நமது கடவுளே.

"கடவுள்" என்பது எல்லாவற்றையும் கடந்துள்ளதாக லாற் காரணக்குறியாயிற்று.

எல்லாவற்றையும் கடந்துள்ளதாவது:—பூத முதலிய இருபத்துநான்கு தத்துவங்களும் பிரகிருதியி லொடுங்க, புருட தத்துவ முதலியன மாயையிலொடுங்க, சுத்தவித்தை முதலியன விந்துவிலொடுங்க, சத்தி சிவங்களின் கூறுகிய அபரவிந்து அபரநாதங்கள் சுத்தமாயையிலொடுங்க, இவையெல்லாங் கடந்து நின்றது சுத்தசிவம் ஆதலாற் கடவுள் என்னப்பட்டது உதாரணம்:—

(சிவஞான சித்தியார் சூத்திரம்-2, பா-72.)

"மெய்தரு பூத மாதி யோரிலி யந்த மாகப்
பொய்தரு சமய மெல்லாம் புக்குநின் றிடும் பசன்று

மெய்தருஞ் சைவமாதி யிருமூன்றும் வித்தை யாதி
மெய்அதத் துவங்களேடமொன் றயின்றெம்பிறைக்கே.''

சேயத்தழுக்கின சிவன் முத்தரான தம்மைப்போலச் சிவசத்தி யநுசத்தரான முடையோரையும் உள்ளிட்டுக் கொண்டு "நமதுடையன்" என்று கதந்தரித்துக் கூறினர். அங்ஙனங் கூறின் சங்கற்பவிகற்பங்கள் தோன்றுமே யென்னும்பேதம் இறிது மில்லாராகலால், உடைமையை உடைப் பொருளாக "நமது" என வுபசரித்தனர். அன்றி மலபரிபாகத்தின்மேல் ஞானம்பிரகாசித்துச் சதாசாரியன் அருளால் நிட்டை கைகூடிச் சிவன் முத்தராய் விகற்ப மின்றி ஓடும்பொன்னும் ஒப்பக்கண்டு, மெய்ப்பொருளின் வியாபகத்தில் வியாப்தமாகப் பொருந்தி அதனை நீங்காம லுடைத்தையாய் அதனையே நோக்கியிருக்கை அவர்க்கியல் பாகலான், அவ்வாறு கூறவுங்கூடும் எனக்கோடலுமொன்று.

உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்-8. பா. 29)

''மிக்கதொரு பக்குவத்தின் மிருசத் திநிபாத
மேவுதலு ஞானம்விளைத் தோர்குருவி னருளாற்
புக்கனுட்டித் தெகிட்டை புரிந்தனோர்கள்
பூதலத்திற் புகழ்சிவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டித்
தமணியத்திற் சமபுத்தி பண்ணிச்சங் கரனோ
டொக்கவுறைந் தியவனயனை யவனியலை விடாதே
யுடைத்தையாய்ச் சிவன்றேத்த மொன்றுமே காண்பர்.''

"துரியவடிவை" என்பது:—துரியஞான சொரூபத்தை. எல்லாவற்றையும் தன்னியல்பாலேயறிந்து, ஆன்மாக்களை அறிவிக்கும்போதே துரியஞானமாம், துரியம் மேலான ஞானமாம். இம்மலாவத்தையிலே தற்சொரூப தரிசனந் தோன்றுவது துரியம்: அஃது அறிவே மயமாயிருத்தலாம். இவ்வாறு தோற்றுவித் தருளியதாகலின் "துரியவடிவு" என்றார். உதாரணம்:—

(திருமந்திரத் திருவருட்பா.)

"அறிவறி வின்ற வறிவு நனவா
மறிவறி யாமை யடையக் கனவா
மறிவறி வவ்வறி யாமை சுழுத்தி
யறிவறி வாகு மான துரியமே"

என்பதனாலும்,

"சிவமா யவமான மும்மலந் தீரப்
பவமான மும்பாசமும் பற்றறப் பற்றத்
தவமான சத்திய ஞானானந் தத்தே
சிவமார் துரியஞ் சொரூபம தாமே."

என்பதனாலும்,

"பரம குரவன் பரமெய்து மாகித்
திரமுற வெங்கணுஞ் சேர்ந்தொழி வற்று
நிரவு சொரூபத்து ணீடுஞ் சொரூப
மரிய துரியந் தனைக்கு நின்றுமே."

என்பதனாலுங்காண்க.

"பேர் அனந்தம்பேசி மறை அனந்தம் சொலும்" என்பது:—அளவில்லனவாகிய அபிதானங்களை யெடுத்து எண்ணிலவாகிய வேதாகமங்கள் ஏத்துகின்ற,

பேரனந்தமாவன:—நிர்க்குணம், நிராமயம், நிரஞ்சனம், நிராலம்பம், நிர்விடயம், நிட்களம், அசங்கம், நிர்வசனம், நிர்த்தொந்தம், நித்தம், முத்தம், தற்பரம், விசுவாதீதம், பரிபூரணம், சயம்பு, சிவம், பதி, பரம், அபரம், பராபரம், அக்கியம், அதக்கியம், தற்பதம், பரபதம், அநுபூதி, பரமாகாயம், அற்புதம், சிதாகாயம், தேசோமயம், சின்மயம், சிற்பரம், ஆதி, அநாதி, ஏகம், அநேகம், அகண்டம், பரஞ்சோதி, மாயாதீதம், குணாதீதம், வன்னிரேதா, சத்தியன், அரு, உரு, புருடன், புருட்டோத்தமன், புருகூதன், மெய், சத்து, பரமான்மா, பரதத்துவன், பரப்பிரமம், யாகமுதல்வன், மும்மண்டலேசன் முதலிய பலவும், பலவேறு சமயிகள் கூறுவனவும், அன்பர்கள் அறிப்பனவும் ஆம்.

மறையனந்தமாவன:—நான்கு வேதங்கள், அவற்றின் சாகைகள், இருபத்தெட்டு மூல ஆகமங்கள், இவற்றின் பிரிவுகள், உபாகமங்கள், இவற்றின் பகுதி விகுதிகள் முதலியவையாம். தாரகம் காயத்திரி முதலியன பகுதிகளும், அங்கம், கலைகள் முதலியன விகுதிகளும் ஆம்.

"மறை அனந்தம்" என்பதற்கு உதாரணம்:—

"இன்னவை யிரண்டு மியவனருள் வலியா
லின்றநான் மறையைக் கான்கும்

பிறப்பிலி கருணை வள்ளில வான
மெய்மை பதிமக் கிரளும்
அன்னவா ருனை நீரகத் தகார
மறியமக் காங்களு முதித்த
சொன்னவக் காத்திற் சொகமை துணிச்
சரவண னெழுகத் துதித்த."

சுருதிகள் பக்குவத்திற் கேற்பக் கடவுளிலை பலவாக வேதங்கள் சொல்லி யிருத்தலின் "மறையனந்த மாகச் சொலும்" எனப் பொருள்கோடலு மொன்று உதாரணம்:

(அத்துவைதப்பசனி.)

"பலபடையாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ் சொல்லப்
பட்டதொரு பொருளினையாம் பணிதல் செய்வாம்."

(அவிரோதவுந்தியார்)

"சுருதிகள் சொல்பல சமயத் துணிவுமப்
பாசிய பந்தமென் றுந்தீபற
பகர்நாமம் வேறுவே றுந்தீபற."

மற்றும் வருவனவற்றுங் காண்க.

"பெரிய மௌனத்தின் வைப்பை" என்பது:—பெருமைத்தாய மௌன நிக்ஷேபத்தை,

பண்டையோ ருகத்தின் கண், சனகாதி நான்கு பிரம விருடிகளும் பரமசிவத்தைப் பிரார்த்தித்து "எங்களறிவு அமைந் தடங்கும் வகைமையை அடியேங்கட் குணர்த்தியருளுதி" என விண்ணப்பஞ்செய்ய, அதனைத் திருவுள்ளத்

நடைத்து, கல்லாலி னிழற்கண் வீற்றிருந்து, வேதாந்தத் தெளிவாகிய ஆகமத்தியல்பும் திரிபதார்த்த வியல்புகளையு முபதேசித்தருளவும், அதனைக் கேட்டுணர்ந்து பின்னரும் "அறிவனைக் கடக்குதற்கு இன்றியமையாக் கருவியாகிய ஞான போதகத்தையும் போதித்தருளல் வேண்டும்" என்ன, பரமகுரவன் புன்முறுவலரும்பி அதற்குயாதுமெதிர் கூறாது, "அது வாயாற் புகல்வதன்று, இவ்வண்ணமிருக்கையே அந்நிலையாகும்" என்று அவர்கட்கு உணர்த்துவாராகித் தனது திருமார்பின்கண் ஒருகையைச் சேர்த்து, ஒருகையில் மோன முத்திரையைக்காட்டி, யோகியர்போல நின்றபடி அவரும் அவ்வாறுணர்ந்து அறிவொழுக்கம் பெற்றுரென்ப. இங்ஙனமாகிய மோனத்திநிலையுந்தானே யாகலானும், அதுவே பரமுத்தியாகிய வைப்பாகலானும், "பெரிய மௌனத்தின் வைப்பு" என்றார்.

மௌனநிலையி லிருப்போர் அடையும் நிட்சேபத்தை வெளிறுமாம். உதாரணம்:—

(கண்ணுடையவள்ளலார்.)

"தானே சிவமான சத்தியரா றுணர்ந்த
மோனநிலை சொல்காழி மூன்றேனே."

என்பதானும்,

"மாயைமயக் கற்றறுத்தற் போத மற்று
மவுனநிலை யுற்றோர்கள் பெற்ற பேறே."

என்பதானுமறிக.

பேசரும் அனந்தபதம் (அனந்த) ஞானம் (அனந்த) ஆனந்தம் ஆம்'' என்பது:—பேசற்கரிய அந்தமில்லாததானபதமும், அந்தமில்லாததான ஞானமும், அந்தமில்லாததான ஆனந்தமுமே தனது மெய்யாகின்ற,

முடிவில்லா தனவாகிய பதத்தையும், ஞானத்தையும், ஆனந்தத்தையும் மனதிற்கொணலே மிகவு அருமை அவற்றைவாக்கினல் வசனித்தல் அதினு மருமையாதலால் "பேசரும்" என்றார்.

அனந்த பதமாவது:—முடிவில்லா நித்தமுத்தியாம் அது கேவல சகலங்கள் நீங்கி, அருளைத் தரிசித்து, காண்பானுங் காட்சியுமா யிருந்துவந்த தற்சுதந்தரத்துவமும் விட்டு, தற்போதமும் நீங்கி, ஆனந்தானுபவம் பெற்று, ஒன்றுந் தானுகாமல் ஒன்றாயிருந்த நிலத்தில் இரண்டறக்கலந்து, போதவாசனையு மொழிந்த சுகாதீதமாகிய நிலையாம்; ஆகலின் "பேசருமனந்தபதம்" என்றார். இந்நிலையே சிவயோகசிவ போகங்களாம்.

அனந்தஞானமாவது, முற்றுமுணர்தலாம்.

அனந்த ஆனந்தமாவது:—வரம்பிலின்ப முடைமையாகிய பரமசுகமாம். அவை முறையே வேதாகமங்களை யருளிச் செய்தமையையும்; இவ்வாகமத்தின் வழியே செல்வார்க்கு வினைகளை யொழித்து அநுக்கிரகிக் கின்றமையும் ஆமெனக்கொள்க.

இனம்பற்றித் தன்வயத்தனாதன்முதலிய ஏனைய ஆறு குணங்களையும் கூட்டியுரைக்க.
அவையாவன:—

"தன்வயத் தனன் றூயவுடம்பினன்
றானி யற்கை யுணர்வின னாதல்
பன்னு முற்று முணர்த லியல்பினன்
பாச நீங்குதல் பேரரு ளாகுதல்
மன்னு மீறில வாற்ற லுடைமையும்
வரம்பி லின்பமு மாகிய வெண்குணம்."

என்பனவாம்.

"பெரிய பொருளைப் பணிகுவாம்" என்பது:—பரமகர்த்தாவை வணங்குவாம், எ-று.

இப்பொருளினும் உயர்வும் ஒப்புமுள்ளது பிறிதொன்றின்மையால். இஃதே எல்லாவற்றிற்கும் பெரியதாகலான் "பெரியபொருள்" என்றார். பாராதியண்டப்பரப்பு அனைத்தும், அவற்றுட் சராசரமனைத்தும் விரிக்கின் பசுபாசங்களுளடங்கும்; இவ்விரண்டும் பதியிலடங்கும், அடக்கவும் தான் சுதந்தரனாய் அவைக்கெல்லாமாதாரமாகி அவற்றொடு தாக்கற்று நிற்பதாகலான் எல்லாவற்றிற்கும் பெரிய பொருளாம். உதாரணம்:—

(அவிரோதவுந்தியார்.)

"பல்லோர் துணிவும் பாரிலுமன் றக்கேர்ந்த
வல்லார்க்கே நில்லெனு முந்தீபற
வவரவர் கொள்கை வேறுந்தீபற."

வைர்முதற் சமயம் கூறுடன்ன விடயங்கள் தனித்தனி அனந்தம் என்னும் பேதங்களை யுள்ளன; அவற்றின் தோற்றக்கேடுகளைச் 'சிற்சத்தியாலுணர்ந்து' 'ஆனந்த மழைபொழியுமுகிலும்' 'நம் கடவுளும்' 'அரியவடிவும்' 'பெரிய மௌனவைப்பும்' 'அனந்தபதமும்' அனந்தஞான மும்' 'அனந்தானந்தமும்' ஆகிய பெரியபொருளைப் பணி குவாம் என முடிக்க.

இது சிவத்தைப் பணிந்தது.

'கருத்தோ அனந்தம்' என்பதிலுள்ள நகாரத்தையும், 'நற்றெய்வமும் அனந்தபேதம்' என்பதிலுள்ள 'பேதம்' என்னும் சொல்லையும் எல்லாவற்றோடுங் கூட்டுக.

'தெய்வமும்' 'சமயமும்' என்பவற்றுள்ள உம்மைகள் சிறப்பும்மை; மற்றவை எண்ணும்மைகள்.

---

## 3 - வது பாடல்.

அத்துவித வத்துவைச் சொப்ரகாசத் தனியை
யருமறைகண் முடிவிலே
யறிவினுக் கறிவாகி யானந்தமயமான
வாதியை யநாதியேக
தத்துவசொரூபத்தை மதசம்மதம்பெறாச்
சாலம்பரகிதமான
சாசுவதபுட்கல நிராலம்பவாலம்ப
சாந்தபதவ்யோமநிலையை

சித்தர்சேர்மலரகித நிஷ்ப்ரபஞ்சப்பொருளை
 நிர்விஷயசுத்தமான
நிர்விகாரந்தனைத் தடத்தமாய்நின்றொளிர்
 பேர்ஞ்ஞானநிராமயத்தைச்
சித்தமறியாதபடி சித்தத்திநின்றிலகு
 திவ்யதேசோமயத்தைச்
சிற்பரவெளிக்குள்வளர் தற்பரமதானபர
 தேவதையையஞ்சலிசெய்வாம்.

"அத்துவித வத்துவை" என்பது:—சிவத்துடன் இரண்டற அநாதியே கலந்துள்ளதாகிய பொருளை,

பண்ணும் இசையும், பழமும் சுவையும், அவற்றினின்றும் வேறன்றும், அவைபோல அபின்னமாகக் கலந்திருக்கின்றதால் வத்துவை ஏகமென்றுமாறும் அவிதமென்றுமாறும், சுருதி கூறிய வண்ணம் "அத்துவிதம்" என்றார்.

உதாரணம்:—(வள்ளலார்.)

"அத்துவிதமொன்றேயா மாங்கிரண்டின்மையெனி
லத்துவித மன்றேவது." என்பதனாலும்,

(திருமந்திரம்)

"அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருப் பாரே," என்பதனானும்,

"அத்துவிதப்பொருளென் றாணைக்களோதுகின்ற
சச்சிதா னந்தத் தனிப்பொருளை."

என்பதனாலுமுணர்க.

'பக்குவான்மாக்களைச் சிவத்துடன் அத்துவிதப்படுத்து வதாகிய வத்துவை' எனலுமாம். இது பக்குவமுடையவ ருக்கு இருவினையொப்பு மலபரிபாகமுண்டாகச் சத்திநி பாதம் விளைந்தவழி மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோ லச் சிவமே மானிடவுருவமேந்திக் குருமூர்த்தமாயெழுந் தருளி, அவர்கள் உடல்பொருள் ஆவியாகிய மூன்றையும் கைக்கொண்டு, ஞானவநுக்கிரகஞ்செய்து, மும்மலங்களை நீக்கி, அவர்களைத் தன்னோடு சுத்தாத்துவித நிலையை யடையச்செய்தலாம். உதாரணம்:—

(அவிரோதவுந்தியார்.)

"மாய்க்குநோய்க்கன்றே மருந்திருவாரின்மா
தேய்க்குமோர் பக்குவற் குந்திபற
தேசிக னாய்ச்சிவ முந்திபற."

(வள்ளலார்.)

"குருவுருவங் கொண்டிக் குவலயத்துட் டோன்றிப்
பருவரலை நீக்கும் பரன்."

(திருவாசகம்.)

"அருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே,"

எனவரும். மற்றும் வருவனவற்றுங் காண்க.

இவ்வாறு அத்துவிதப்படுவதே வீடு. உதாரணம்:—

(திருவாய்மொழி.)

"நன்றாய் ஞானங் கடந்துபோய்
நல்லிந் திரிய மெல்லாமீர்த்
தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா
ழுலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள்
செற்றுக் களைந்து பசையற்றா
லன்றே யப்போதே வீ
டதுவே வீடு வீடாமே.

என்பதனாலும்,

(சிவானந்தமாலை.)

"வித்தையுடற்கட்டறுத்து மெய்யுணர்வாய்மெய்யொழிக்கும்
தத்துவமுங்கேவலமுஞ்சார்வகற்றிச்—சுத்தத்
தனியாயிருந்தாலும்போய்த்தற்பரமாய்விட்டாற்
சென்னியானிதுசத்தியம்" என்பதனாலும்.

(அவிரோதவுந்தியார்.)

"அந்தப் பரத்தோ டகண்டற் றவிக்கமா
மந்தகன் னிட்டையே யுந்தீபற
அத்துவித வீடென் றுந்தீபற."

என்பதனாலுமுணர்க.

'வீடு' என்பதற்குப் பொருள்—விடுதலை. விடுதலையா வது பந்தநீக்கமாதலின் பந்தமொன்று உண்டென்பதும்,

அசித்து உண்டாகவே பந்தத்தினலே கட்டுப்பட்டிருந்து அறிகின்றதாம் விடப்படுவோன் உண்டென்பதும், பந்தம் சடமாகையினலும், பந்தமுடையோன் சுதந்தர னல்லனாகை யினலும், உயிர்களுக்குப் பந்தத்தை நீக்கி முத்திகொடுப் பான் ஒரு சுதந்தரகர்த்தா உண்டென்பதுஞ் சர்வமத சம் மதமாம். உதாரணம்:—

(சிதம்பரசுவாமிகள்.)

"வீடென் றுரைதரு சொற்குப்பொருளோ விடுதலையாத லினல், வீக்குண்டோனுங் கட்டொக விளக்குந் திடமாகப், பீடுறுகட்டுத் தானும்விட்டுப் பெயராதுசடமாம், பிணி பட்டோன சுதந்தரனும் பிணிபோச்செய்வோன்; நீடு சுதந்தரமுனனுமொருவன் வேண்டுமேயலினு, னிகழ்பதி பசு பாசம்மென மும்பொரு ளிச்சமயமென்றருளி, வேடனை வென்றுங் குருவா மெய்னையான் மெய்ப்பொரு ளியல்பேறு, வேதநெறிப் பயனாக வளர்த்திய வெண்ணெய்க் கனியே."

மேற்கூறிய பக்குவான்மாவாகிய சற்சீடனது குணவி சயங்கள்:—

(சிவநெறிப்பிரகாசம்.)

"கூறியிடா திட்டபணி செய்து குருபத்தி
குறைவிலராய் கம்பினராய்த் துரோகமின்றி
மாலிலராய் மனவாக்குக் காயத்தாற் குருவின்
வாக்கியபா லனஞ்செய்வு மதிமானு மாமே."

அன்றியும்,

"ஆதாரஞ் சாத்தியநற் பொதுமை தானு
மைந்தியபின் வாயுமையு மாசேசந் தானும்
ஈதான செயன்மறக்கு நல்லியரிக் கிடமுஞ்
செயகமத்தைக் கேட்டதனைத் தெளிதலுறும்
பொருளறப் பொறியழிவி னிற்ற லறிவ்
புனைநடைய நற்குணங்கள் பொருந்தி மேலும்."

முதலியவாம்.

இது காரியத்தைக் காரணமாக வுபசரித்ததெனவுணர்க.

"சொற் பிரகாசத் தனியை" என்பது:—மந்திரவடிவப் பெருமானாகிய ஒன்றை,

பிரபஞ்சவுற்பத்திக்கு உபாதான காரணங்கள் குண்டலி சத்தி. அசுத்தமாயை, பிரகிருதி, எனமூன்றும். அவற்றுட் குண்டலி சுத்தமாயிருத்தலால், பரசத்தி அதனை அதிட்டித்துநின்று வாக்குண்டாய், அதிற்றோன்றிய மந்திரங்களே திருமேனியாய், உயிர்களுக்குப் புத்திமுத்திகளைக் கொடுத்தலால், "சொற்பிரகாசம்" என்றார். மந்திரம் சிவனுக்குத் திருமேனியாகு மாதலால் தனக்கும் அத்திருமேனியுண்டென்பது போதரும்.

உதாரணம்:—(சிவஞானசித்தியார், சுத்-1. பா-59.)

"மந்திரமதனிற்பஞ்சமந்திரம்வடிவமாகத்
தந்திரஞ்சொன்னவாதிக்கென்னெனிற்சாற்றக்கேளீ
மூத்தியதோற்றத்தானுமந்திரமூலத்தானு
மந்தமில்சத்தியாதிக்கிசைத்துமாகுமன்றே."

என்பதனாலும்,

"பங்கயத்தண் ணரியபரம் பானுருவே
தனக்குரிய படிவ மாகி"

என்பதனானு முணர்க.

சொல்லின் றெளிவாகிய ஒன்றையெனினுமாம், உதாரணம்:—

(பட்டினத்துச் சுவாமிகள்.)

சொல்லினுஞ்சொல்லின் முடிவிலும்வேதச் சொருபியினு
மல்லினுமாசற்றவாகாயந்தன்னினுமாய்த்துவிட்டோர்
சில்லினுமன்பரிடத்தினுமீசனிருப்பதல்லால்"

என்பதனானும்,

(திருவுந்தியார்.)

'சொல்லும்பொருள்களுஞ் சொல்லாதனவுமல்
லல்லவுமானதென் றுந்தீபற
யம்பிகைபாகனென் றுந்தீபற"

என்பதனானு முணர்க.

இவ்விரதிகளிற் சொற்பிரகாசத்தனியை:—(சுயமாய் பிரகாசிக்கும் ஒன்றை) யென்றிருக்கின்றது. இது பின்வரு மவைகளோடு கூடியது கூறலெனுங் குற்றத்துக் கிடன்படு மாதலாற் பிசகேயாம்.

"அருமறைகள் மூசு அறைய" என்பது:—அருமையாகிய வேதங்கள் பலவு மதிப்புமாறு முழங்காநிற்ப,

அருட்சத்தியே யுயிர்க்கு உணர்வாகிப் பேரின்பத்தை யடைவிக்கின்றது என வேதாகமங்கள் ஐயமற வுணர்த்துகின்றது என்பதற்கு "மறைகள் மூசறைய" என்றார்.

வேதத்துட்பொருள் யாவருக்கு மெளிதல்ல வாதலால் "அருமறை" என்றார். சகல இரகசியங்கட்கும் உறைவிடம் வேதங்களாகலினாலும், அவற்றின்பொருள் மறைதபொருளா யிருத்தலினாலும், வேதங்கள் "மறை" எனும் பெயர் பெற்றன. முரசறைதல்—வெளிப்படுத்தல்.

"அறிவினுக்கு அறிவாகி ஆனந்தமயமான ஆதியை" என்பது:—சிற்றறிவாகிய வுயிர்க்குள் அறிவாகிப் பேரின்பப் பெருக்கே தனது மயமான ஆதிசக்தியை.

உயிரானது உடலுக்கும் அந்தக்கரணங்கட்கும் அன்னியமானதென்றும், பாசவுணர்வொழிந்து நின்றவிடம் பசுவுணர்வென்றும், பசுவுணர்வொழிந்து நின்றவிடம் பதியுணர்வென்றும், தனது ஞானக்கிரியைகள் மலமறைக்கப்பட்டு அவத்தைப்படுமென்றும், தன்னைக் கர்த்தர் சத்திதானேயான அருள்காரணமாகக் கருவிமுதலியவற்று ளுணர்த்துவனென்றும், பக்குவச்செயலைக்கண்டு வியாபகமான அறிவையுதவி, முத்தியில் ஆனந்தம்பெறுமென்று முணர்த்துதலை "அறிவினுக் கறிவாகி ஆனந்த மயமான ஆதி" என்றனர். உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்-5. பா-8.)

"தெரிந்துகொண் டோமெனன் றுகச்
சென்றறைந்து புலனும் பற்றி
புரிந்திடு முணர்வி னூடு
போகமுங் கொடுத்தி யோனி

இரிந்திடு மறுவுஞ் செய்து
செய்திகள் பேர்கட் கெல்லாம்
விரிந்திடு மறிவுங் காட்டி
வீட்டையு மளிப்பன் மேலோன்.

எனவும்,

(கந்தபுராணம்.)

"அருளி னீர்மையா லைந்தொழில் புரிபவன்" எனவும்,

(சௌந்தரியலகரி.)

"சிவமெனும் பொருளு மாதி சத்தியொடுசேரி னைந்தொழிலும் வல்லதாம்."

எனவுங் கூறியவாற்றால், பஞ்சகிருத்தியங்களும் ஆதிசத்தியின் சேர்க்கையால் நடக்குமெனவும் ஒக்க. இவ்வாறு கூறுதலும் சத்தியும் சிவமும் ஒன்றுதல்பற்றிஎன்க. உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூ-2. பா-77.)

"சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ்
சத்திதான் சிவத்தை யீன்று
முவக்கிரு வரும்பு ணர்ந்திங்
குலகுயி ரெல்லா மீன்றும்
பவன் பிரம சாரி யாகும்
பான்மொழி கன்னி யாகுந்
தவத்தரு ஞானத் தோர்க்கித்
தன்மை தான் றெரியு மன்றே."

'அறிவினுக்கறிவாகி' என்பதற்குதாரணம்:—

(வள்ளலார்.)

'அறிவுக் கறிவா யறிவிப்பான் இல்லேலர்க்
கறிவுருவு கொண்டருளு வான்.'

(கந்தபுராணம்.)

'ஒருமையா னுணருவோ ருணர்வினுக் குணர்வதாம்
பெருமையா னெங்கணும் பிரிவரும் பெற்றியான்.'

என்பனவற்றாற் காண்க.

ஈச்சரனுக்குரிய கல்யாண குணங்களில் 'பரமவின்பம்'—(அளவிலாப் பேரின்பம்) ஒன்றாதலால் 'ஆனந்தமயம்' என்றார். உதாரணம்;—

(வள்ளலார்.)

"இன்ப மயனீச னின்பம் விளைத்தலாற்
சம்புவெனும் பேருந் தரும்."

(திருமந்திரம்.)

"இன்பமு மின்பக் கலவியு மாய்நிற்கும்."

என்பனவற்றாற் காண்க.

"ஆதியை" எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய முதற்பொருளை (பரமசிவத்தை) யெனினுமாம்.

உதாரணம்:—

(திருமூலர்.)

"அருளும் வகைசெயு மாதிப் பிரானும்."

என்பதனானும்,

"பகலவன் பல்லுயிர்க் காதியுமாமே"
என்பதனானுமறிக.

'அநாதி ஏகதத்துவ சொரூபத்தை' என்பது:—ஆதிய ந்த மில்லாததாய சிவமே தானாகியும், தானே சிவமாகியும், ஒன்றாயுள்ள உண்மைவடிவம்.

சத்தி சிவத்தின் வேற்றுமையின்றி நிற்குமென்பதாம். சத்தியுஞ்சிவமும் இரண்டென்னில், நீக்கமுற்று நிற்ப தெனப் பொருள்பட்டு, சருவவியாபகம் பின்னப்படுமாத லால், சூரியனும் கிரணமும்போல, தன்னியல்பினிற்பதும் புறம்பேகின் றுணர்த்து வதுவாகிய இரு தன்மையை யுடைய பேரறிவாய சைதன்யமொன்றே பரப்பொருளை நோக்கு நிலையிற் சத்தியெனவும், அதனை நோக்காது அறி வுமாத்திரையாய் நிற்கு நிலையிற் சிவமெனவும், வேதாக மங்க ளுணர்த்துமாற்றால் "அநாதியேகம்" என்றும், அன லின் தன்மைபோன்ற சுடுதல் அடுதல்முதலிய தொழி லால் வேறுவகை யாமாறுபோல, சிவசத்தி ஒன்றே காரிய வேறுபாட்டால் சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞான சத்தி, கிரியாசத்தி என்றைவகையாயும், நிவிர்த்திமுதலிய ஐவகையாயும், இன்னும் பலவேறு வகையாயும் நிற்குமாத லால், "தத்துவசொரூபம்" என்றுங் கூறினர். அவ்வச் சத்திகளோடு புணர்ந்த சிவமும் அச்சத்திகட்கு இடமான விந்துவும் பலவேறு வகையான விருத்திப்பட்டு அவ்வப் பெயர் பெறுமென்றுணர்க. உதாரணம்:—

(சிவஞானசித்தியார்.)

'மருவிடு மனாதிமுத்த சித்துரு மன்னிநின்றே.'

(கந்தபுராணம்.)

"இத்திறத்தா லசமத்தா லீறுமுத லொடுவிலா
வத்தனது திருவடிக்கீழ் முடங்கியே யானையினான்."

எனவும்,

"அன்னையுமேகன்றுறு மனப்பருங்குணத்திறுதுவம்."

(பிரமகீதை.)

"ஒருத்தனே யவிளுளி யாகிய
வொளியாயவ னொளிர்கின்றான்."

எனவும்,

(தத்துவராயர்.)

"தலம்வந்த தத்துவனு மெம்மையமே
யின்றுசார்ந்தனமே."

'போதமேதத்துவரு பம்பிதனைச் சங்கையற்ற
மானவைபெத்திவிடை கன்றுப்புதை.'

எனவும் வருவனவற்றுற் காண்க.

"மதசம்மதம் பெறச் சாலம்ப ரதிதமான சாதுவதம் புட்கலம் நிராலம்பம் ஆலம்பம் சாத்தபதம் வியோம நிலையை" என்பது:—பற்பல சமயங்களிலும் பலவேறு பொருண்மைபடக் கூறுங் கொள்கைகளின் அவ்வவ்வாற்

னின்றும், அவைக் கதீதமுமாகின்ற சாலம்ப ரகிதமும் சாசுவதமும் புட்கலமும் நிராலம்பமும் ஆலம்பமுமான சாந்த பதமென்னும் பரவெளியை,

“மதசம்மதம்பெறு” என்பதற்குதாரணம்:—

(பட்டினத்துச்சுவாமிகள்.)

“அன்றென்று மாமென்று மாறு சமயங்க
ளொன்றோடொன் றொவ்வா துரைத்தாலும்.”

என்றும்,

(பிரமகீதை.)

‘வேதமா கமபு ராண மிருதிகள் வேறு மார்க்க
போதமா மெங்கடர்க்க மொன்றோடொன்றொவ்வா தாகும்.’

என்றும் வருவனவற்றாற்காண்க.

சாலம்பம் - ஆதாரத்தோடு கூடியது; சாலம்பரகிதம்- தானென்றோர்பிடிப்பில்லாதது; எல்லாவற்றிற்குந்தான் ஆதாரமா யிருத்தலன்றி, தனக்குத் தன்னிலும் வேறோ ராதாரமின்றி யுள்ளது. உதாரணம்:—

(சிவஞானசித்தியார்.)

‘நின்றென்றுந் தோன்றிடுநி ராதார னாயே’

என்பதனானும்,

‘ஆதாரமின்றிச்சற்று மனைத்திற்கா தாரமானாய்’

என்பதனானுங் கண்டுகொள்க.

சாசுவதம்—முதலு முடிவு மில்லாதது.

(பிரமகீதை.)

"எப்பொருள் களுக்குந் தோற்றமு மீடு
மிறுதியு மிதன்கணே யாகி
யொப்பிட வொன்று மின்றியே யென்று
மொன்னதா யுரையுணர் விறந்த."

என்பதானும்,

(சிவஞானசித்தியார்.)

"அந்தமோ டாதி யில்லா னளப்பில னாதலாலே."

என்பதானு மறிக.

புட்கலம்—நிறைவு. உதாரணம்:—

(கந்தபுராணம்.)

"ஒருவர் பாலினும் பிறந்திடா னருவது மருவா
யிருமை யாயுறை பூரண னியாவர்க்கு மீசன்."

(வள்ளலார்.)

"போக்கொடு வரவுமில்லாப்
பூரணப் பொருள்வத் தெய்வம்"

மற்றும் வருவனவற்றுங் காண்க.

நிராலம்பம்—தன்னினும் பிறிதொன் றியற்கையானே யில்லாதது. உதாரணம்:—

(பிரமகீதை.)

"ஒழிந்ததொரு பொருளில்லை யுள்ளதெல்லா மவனே
மூன் கழிந்தபொருள் மேலும் வாக்கடங் பொருடானு
மவன்."

(கந்தபுராணம்.)

"மூல காரண மில்லாதோர் பராபர முதல்வன்."
என்பனவற்றுற் காண்க.

ஆலம்பம்—எல்லாவற்றிற்கும் தானே ஆதாரமா யிருப்பது. உதாரணம்:—

(திருவாசகம்.)

"ஒன்றாரீ யல்லை யன்றியொன் றில்லை
யாருனை யறியகிற் பாரே."

(தேவாரம்.)

தக்கானைத்தானன்றி வேறொன் றில்லாத் தத்துவனை."
என்பனவற்றுற் காண்க.

சாந்தபத வியோமகிலை—அகங்காராதிகளில்லாத தானமாகிய ஆகாயம். உதாரணம்:—

(அருணகிரிநாதர்.)

"இராப்பக லற்ற விடத்தே யிருக்கை
யெளி தல்லவே."

(தலமான்மியம்.)

"மங்கல்செய் மலம்புலன்கண் மானவோட்டி
மன்னுயிரை யாட்கொள்ளும் விருது கட்டித்
தங்கமமை தனிக்கிடமே தந்து மெங்கட்
டுரைமகன்றன் றிருவடியைத் துணைக்கொள்வாமே."

(ஞானவாசிட்டம்)

'இடவிசும்பன் றுயிருக்கும் விசும்பான
சிவையதுவாம்.'

என்பனவற்றாலறிக.

யோகமாவது அகத்தொழில் மாத்திரையானே ஈசுரன் அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. அது இந்திரியங்களை யொடுக்கி மனத்தை விடயங்களின் வழி செல்லவொட்டாமல்திருப்பி, ஒரு குறிப்பில் நிறுத்தி, உச்சுவாசம் நிச்சுவாசமென்னும் இரேசகபூரகவாயுவைத் தடுத்து, நடுநாடியாகிய சுழுமுனைமார்க்கத்திலே பிராணவாயுவை நிறுத்தி, மூலாதாரமுதலிய ஆறாதாரங்களின் அக்ஷர மா திருக்களையுமதித்து, அவ்வவ் வாதாரங்களி லதி தேவதைகளை யுபாசித்து, அவர்களனுக்கிரகத்தா லவ்வாதாரங்களி லதோமுகமான பதுமங்களைப்பெயர்த்து, அவற்றின்மேல் பிரமரந்திரத்தையும் அசைவுடன் சென்றிலைத்து, அங்கு அதோமுகமாகவிருக்கும் சகஸ்திரதள தாமரை மொட்டை ஈசுவரனுணால் அங்கு உதிக்கும் ஒளிக்கதிரிலே மலரச்செய்து, அந்தத் தாமரைப் புட்பத்தின் கேசரத்திலே உள்ள சந்திரமண்டலத்தை ஆகுஞ்சனஞ் செய்தலினாலே மூலாக்கினியை அக்கினி பீசாட்சர உச்சாரணத்தினாலே எழுப்பி, நாடி சக்கரங்களைப் பேதித்து, அவ் வக்கியினாலே சந்திரமண்டலத்தை யிளகப்பண்ணி அந்த வமிர்தத்தைச் சர்வநாடிவழியாயிழுத்து, உடல்முழுதும்நிறையச்

செய்து, அதினுண்டாகும் சுயோதயத்தில் அந்தமயமான ஞாதுருவிர்த்தாவத்தையை யடைந்து நின்று, சோம சூரியாக் கினிப் பிரகாசாதிகளாகிய பிரத்தியேகப் பிரகாசங்களெல் லாம் சூரியோதயத்தில் நட்சத்திராதி பிரகாசங்க ளடங்கி னாற் போலத் தன்னிடத்தடங்கப் பரவொளிவெளியிற் சர்வ தோமுகமாய்ப் பெருஞ்சோதியான வெத்தைச் சத்தி யோகி கேசரிக்கிச் சுயம்பிரகாசமா யதனுளழுந்து மியல் பாதலாலும், சாந்தி யோகத்திற்குக் காரணமாதலாலும், யோகியர்புக்கழுந்துவது பரவெளிச்சோதி புன்னாகலாலும் 'சாந்தபத வியோமநிலை' என்னப்பட்டது.

உதாரணம்:—

'காலை நேர்பெற வெட்டியே கனலினை மூட்டிப்
பாலை மார்பயன் வீட்டியே தன்னுரு படிவத்
தேறு மன்பினின் மஞ்சன மாட்டியே விரைக்குச்
சீல மாமலர் சூட்டியுட் பூசனை செய்தான்.'

'காலனும் வாயிரங் கழிந்த பின்முறை
மாறுமா மருத்தெழு மாலைத் தாண்டியே
மூலமெல் கனலினை மூக்கி மூட்டிரு
மேலுறு மயிர்நிலை மிசைதன் மேயினான்.'

இடத்தின் பொருளை யிடமாகவுபசரித்தனர்.

'நீத்தம் நின்மல சுகிதம் நிட்ப்ரபஞ்சப் பொருளை,' என்பது:—நீத்தத்வமும் இயற்கையிலே அநாதி மலமில் லாததும் பிரபஞ்சாவத்தைகடந்துள்ளதுமாகியபொருளை.'

விடயங்களை யொவ்வொன்றாய் விசாரித்தறிய அவைதான் பந்தன்மையன வென்று அநுபவத்தாற் கண்டு ஒழிவுபெறதும், ஆன்மா தனது நிலைமையையும் உணரப்பெறும். பெறவே நித்தமாயுள்ள இதுவெனவே மேலே புணரக் கிடைத்தற்குத் திருவருள் முன்னிற்பதாகலான் இது மெய்ப்பொருளின் குணமென்றும், சமவேதம்பற்றி நித்தத்துவமும் சிவம் மலத்தான் மறைக்கப்படாத இயல்புடைமைத் தாதலால் அதன்குணமாகிய சத்தியும் அவ்வியல்பாலால் நின்மலசித்தாம், ஆன்மாக்கட்குச் சகலக்களைப் பக்குவத்தில் இல்லையாகப்பண்ணிப் புலக்கொளுத்தி வீட்டின்கணுய்ப்பதற்குச் சத்தி கருவியாய் முன்னிற்றலால் 'நிட்பிரபஞ்சப் பொருளுமாம்' என்பது காண்க.

உதாரணம்:—

(கந்தபுராணம்.)

'நித்தனு முயிர்க்கு ளெங்கா நிருத்தனு மவனே
யென்றும்.'

(வள்ளலார்.)

'பராபரமாய் நித்தமாய்ப் பரிபூரணமாய்.'

என்பதனுனும்,

'நீருறு நிலவே நினைவதே வரிய நின்மலா
நின்னருள் வெள்ளம்.'

(கந்தபுராணம்.)

'நிர்க்கு ணத்தனே நிமல னன்னவன்.'

என்பதனாலும்,

(வள்ளலார்.)

'உலகமேழையுங் கடந்தவ னடிகளோ புலப்பரம்.'
'உலகப் பற்றை யொழித்த நிபுணன்'

என்பதனாலுமறிக.

'நிர்விடய சுத்தமான நிர்விகாரத்தை' என்பது:—விடயப் பற்றுக்க ளொன்று மில்லாததாய்ச் சுத்தமாக யாதொன்றின் வயத்தும் தானெய்தாமல் யாவும் தன்வயத்தனவா வுள்ளதை,

மயக்கவடிவாகிய கேவலாவத்தையும், விகற்பவடிவாகிய சகலாவத்தையுமே விடயமாகும். அவையில்லாதது நிர்விடயம். இதுவே சுத்தாவத்தையாம். இதில் நின்ற திருவருளே யனைவர்க்குந் தாரகமாதலால் நிர்விடயமும், சுத்தமும், நிர்விகாரமுமாம் என்பதுகாண்க. நிர்விடயம்-அபரிச்சின்னம்; சுத்தம்-தான் பூரணனுமாயிருந்து பிறிதொன்றுடனும் மதியொன்றாமை; நிர்விகாரம்-விகாரங்களை யடையாதது. உதாரணம்:—

'விடயப் பேயை விலக்கியவிபுதன்.'

(தேவிகாலோத்தரம்)

"பொருவிலா நித்தகத்தப் பொருளினை
யடைவரன்றே."

(கந்தபுராணம்.)

'சுத்தனு முணர்தற் கொண்ணாச் சோதியு
மியாண்டு மேவும்.'

(வள்ளலார்.)

"அறிவுக் கறியா வவிகாரி யாகி
நிறைதல் பதிநிச் சயம்."

"அவிகாரி யீசனருளாலே பெற்று
லவிகாரி யானவையன்றி யச்சோ."

என்பனவற்றா லறிக.

* 'தடத்தமாயி நின்று ஒளிர் நிரஞ்சனம் நிராமயத்தை' என்பது:—இஃதெனவும் அஃதெனவும் இஃதன்றெனவும் அஃதன்றெனவும் பிரிதிவி முதலிய கருவிகளாயும் அவையல்லாததுமாகி நிலையாய்நின்று விளங்காநின்ற நிரஞ்சனமாகிய நிராமயத்தை.

நினைக்கு வேண்டுதலும் வேண்டாமையுமாகிய பற்றொரு நிறீதியின்றாய்த் திருவருட்போத ஞானவரை நீட்டினுக் குய்ப்பதும், தோற்றக்கேடில்லாத அருட்சத்தியேயாக லின் "நிரஞ்சன நிராமயமும்" ஆமாறு காண்க. தடத்தம்-

பொதுவாயிருக்கை; நிரஞ்சனம்—பற்றில்லாதது; நிராமயம்—அலைத்தை யில்லாதது. உதாரணம்:—

(தேவாரத் திருவருட்பா.)

'புக்கானை யெப்பொருட்கும் பொதுவானானை.'

(வள்ளலார்.)

"சாற்றிரண்டேற்ற சமயநிலையை கடந்தது
வீற்றிருப்ப னெங்கள் விமலன்."

(தத்துவராயர்.)

'நிரஞ்சன நிராமய பராபர புராதன.'

(திருவள்ளுவர்.)

"பற்றுக பற்றற்றான் பற்றினை"

(வள்ளலார்.)

"நிராமயமாய் நிட்களமாய் நீங்காப் புராதனமாய்."

(தேவாரத் திருவருட்பா.

"நிராமய பராபர புராதன பராவுசிவ
ராக வருளென்."

என்பனவற்றாற் காண்க.

"சித்தும் அறியாதபடி சித்தத்தில்நின்று இலகு தீபமாந் தேசோமயத்தை." என்பது:—சித்திக்கும் தன்மைத்தாகிய சித்தம் இன்னபடித்தென அறியாவண்ணம் அச்சித்தத்தி னிடத்தே நின்று உள்ளும் புறம்புமாய்ப் பிரகாசிக்கின்ற உயர்விளக் குயர்வான தேசோராசியை.

பாலும் கன்னலும் நீரும் நிழலும்போலச் சிவசக்தி யின்கண் தற்போதங்கழன்று நீங்கா திருப்பவராகிய பலை யோகர், ஒன்றென்றும் இரண்டென்றுமாகாத கலப்பிற் பரமசுகத்துடன் பொருந்தியிருக்க, இருள் நக்ஷத்திரங்கள் சந்திரன் முதலியன சூரியனொளிமுன் றோன்றாதவாறு போல, எல்லாரும் எங்கும் எப்போதும் அகண்டாகார சோதியே பார்த்து நிற்குமாற்றால், "திவ்யதேசோமயரூ மாம்" என்பதுணர்க. இவ்வுபயக் காட்சிதோன்றித் தற்போதம் நீங்கினவழி விகற்பமின்றி எங்குமாகப் பிரகா சிக்கின்றமையால் "சித்தமறியாதபடி சித்தத்தினின் றிலகும்" என்றபடி. உதாரணம்:—

(அமுதசாரம்.)

உள்ளத்தி னின்று மொளிர்த்தான் பரஞ்சுடர்.

(பிரமகீதை.)

நீமசக் கொதுமடைக் குழிவருஅ தெரிவா
காமை நின்றனி யாக்கூடிவு காணு மதுபோ
லாகு டம்பிவழி யின்றி மறை கின்றவமை
னேடுமெ னும்பொருளுணர்த்திட வுடம்பிலொளியாம்.

(தேவாரத் திருவருட்பா.)

சிந்தையு ளொன்றி நின்றவெம்மான்.

கற்றுளி புன்னை யொளித்தாய் போற்றி.

என்றும்,

(திருமூலநாயனார்.)

'பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர்.'

(பிரபுலிங்கலீலை.)

'ஆயபர மானந்த பரஞ்சோதி தோன்றக்கண்
டிருந்தார்.'

(அருணகிரிநாதசுவாமிகள்.)

அந்தவி தந்தமுத லந்தந்த லங்களென
வவனி யெனவமர ரண்டத்த கண்டமென
வகில சகலமென வெண்டிக்கில் விண்டுமென-வர்ப்பொருளு
அமுத விரணமென வக்கத்து மக்ரமென
வறைவு மறைக்கின குக்கத்து வக்கமென
வருவிலனுவெனவென்றைத்திட்டின் றன்றார் பரப்பிரகாசம்

(திருமூலநாயனார்.)

"பரமாண்டத் தூடே பராசத்தி பாதம்
பரமாண்டத் தூடே படரொளி யீசன்
பரமாண்டத் தூடே பகர்தரு நாதம்
பரமாண்டத் தூடே பரனட மாமே."

(வள்ளலார்.)

நிராமயமாய் நிட்களமாய் நித்தியமாய் நின்மலமாய்ப்
புராதனமா யசஞ்சலமாய்ப் பூரணமாய்ப் புனிதமாய்ச்
சராசரமாய்ச் சாக்ஷியாய்ச் சத்தியமாய்ச் சித்துருவாய்ப்
பராபரமாய் வெறுவெளியா யிருக்குமந்தப் பரமசிவம்.

"ஈசனாய்ப் பரம தந்திர னாகி
யீறிடை முதலில னாகி
யேசறு மணியா யெவைக்குமா தார
மகிலமே தனக்கவை யிலையாய்ப்
பாசமோ சகனா யனாதிமுத் தனுமாய்ப்
பரஞா னானந்தக் கடலா
யாசையாற் காண்போர்க் கற்புத வடிவா
மம்பிகா பதியினைப் பணிவாம்."

என்றும் வருவனவற்றாற் காண்க.

'சிற்பரவெளிக்குள்வளர் தற்பரமதான பரதேவதைதனை அஞ்சலிசெய்வாம்' என்பது:—சித்தாகிய பரமாகாயத்தில் பூரணாகாரமாயிருக்கும் சிவசத்தியை அஞ்சலித்து வணக்கஞ் செய்வாம். எ-று.

சிற்பரவெளி—பரம ஆகாயமாம்; இதன்பொருளை முதற் பாட்டுரையிற்காண்க. ஆகவே, பரமாகாய சரீரியான சிவம் என்பதாம்; எனவே, சிவத்தினுட்பிரியாததாகி பூரணாகாரமாய்த் தான் அறிவாகியும் ஆனந்தமாகியும் உள்ளது சத்தி என்றவாறாம். உதாரணம்:—

(சிவஞான சித்தியார், சுத்-5-பா-9.)

'அருளது சத்தியாகு மரன்றனக் கருளையின்றித்
தெருள்சிவ மில்லையந்தச் சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை யருளால்வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியாலோட்டு மிரவியைப்போலீசன்.'

ஆன்மாக்களுக்குப் பந்தமோசன காரியார்த்தமாகக் கேவல சகலாவத்தைகளிற் சிவசத்தினது திருவருளின் தாரதம்மியாதிக் கேற்ப அச்சிவசத்தியும் பரை ஆதியிருப்பு அறிவு தொழில்களான ஐந்து கலாசத்திகளாயும், நிவிர்த்தி முதலிய ஐந்து கலாசத்திகளாயும், வாமை முதலிய அட்ட சத்திகளாயும், உன்மனி சமனை முதலிய கலைகளாயும், இன்னும் காரிய வேறுபாட்டாற் பல்வகை உருவங்களையும் பெயர்களையும் பெற்று ஆறுகோடி மாயாசத்திகளாகியும பிரிந்தும், சிவத்தோடென்றும் பிரியாமலும் நிற்றலால் 'அத்துவிதவத்துவை' எனத் தொடங்கி 'சிற்பரவெளிக் குள்வளர் தற்பரமதனைப்பர தேவதையை', என முடித்து, அதனுண்மையை எடுத்து வாழ்த்துதல் செய்தனர்.

இனிச்சிவம் எவ்வாற்றானிற்கும் அவ்வாற்றாற் சத்தியும் சமவேதமாய் நிற்குமென்று மியல்பால் 'அங்கிங்கெனாதபடி யெங்கும்பிரகாசமாயானந்தபூர்த்தியாகி' என்றும் செய்யுளில் 'ஆனந்தபூர்த்தியாகி அருளொடுநிறைந்தது' என்பதற்கு 'அத்துவிதவத்துவாகிய சொற்பிரகாசத்தனி, என்பதனையும், 'உயிர்க்குயிராய்த்தழைத்தது' என்பதற்கு 'ஆனந்தமயமான ஆதி, யென்பதனையும், 'மனவாக்கினில் தட்டாமனின்றது' என்பதற்கு 'ஏகதத்துவசொரூபம்' என்பதனையும், 'வழக்கிடவுநின்றது' என்பதற்கு மதசம்மதம் பெறுஞ் சாக்ஷிபதவியோமகிலே' என்பதனையும், சித்தாதி யின்பமாயென்றைக்கு முள்ளதெது' என்பதற்கு 'நிட்பிர பஞ்சப்பொருள்' என்பதனையும், கங்குல்பக லற்ற

எல்லையுளது, என்பதற்கு 'சுத்தமான சிவ்விகாரத்தைத்' என்பதனையும், 'அது சுருதிச்சிகைக்கது' என்பதற்கு, 'நடத்தமாய்' சின்னெறுனிர் கிராமயம்' என்பதனையும், 'அது வே கண்டனவெலாம்' என்பதற்கு, 'நிஷ்பிசசோமயம்' என்பதனையும், 'மௌனவருவெளியதாகவும் கருதி அஞ்சலிசெய்குவாம்' என்பதற்கு 'சிற்பரவெளிக்குள் மனர் தற்பரமதான பரதேவதையை யஞ்சலிசெய்வாம்' என்பதனையும் நிரைநிரையாகக்கூட்டிப் பொருளுரைத்துக் கொள்க.

சிவம் எவ்வாறு சிற்றும் அவ்வாறு சத்தியுமா மென்பதற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சுத்-௨. பா-75.)

சத்தியாய்விந்துசத்தி யாய்மனோன்மனிதானு
மொத்துமகேசையாகி யுமைதிருவாணியாகி
வைத்துறுஞ்சிவாதிக்கிவ்வன் வருஞ்சத்தியொருத்தியாகு
மெத்திறநின்றனீச னத்திறமவளுநிற்பள்.

(விநாயகபுராணம்.)

'எத்திற மிறைவ னின்றனை யவனுக்
கியைபுற வத்திற நின்று
மெத்திய வுயிரின் மலவிருள் கெடுத்து
விளக்குறூ ரணியையேத் தெடுப்பாம்.'

மற்றும் வருவனவற்றானுணர்க.

சத்திக்கும் சிவத்திற்கும் பேதமின்மை என்பதற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்-2. பா-76.)

"சத்திதானாதமாதி தானுமாஞ்சிவமுமந்தச்
சத்திதானாதியாகுந் தரும்வடிவானவெல்லாஞ்
சத்தியுஞ்சிவமுமாகுஞ் சத்திதான்சத்தனுக்குச்
சத்தியாஞ்சத்தன்வேண்டிற் றெல்லாமாஞ்சத்திதானே."

தேவதை, கடவுள், தெய்வம், சிவம் முதலிய சொற்கள் அஃறிணைப் பெயர்களாயினும் உயர்திணை முப்பாலினும் வழங்கிவருகின்றனவாதலாற் பரதேவதை என்பதைப் பரமசிவன் என ஆண்பாலாகக் கோடலுமாம்.

'சிற்பரவெளிக்குள்வளர் தற்பரம்' என்பதற் குதாரணம்:-

(நெஞ்சுவிடுதூது.)

வெறுவெளியாய்ப்பாழாய் வெறும்பாழுக்கப்பா
லுறுபொருளாய் நின்றவொருவன்.'

(சிவப்பிரகாசம்.)

சொற்பெறுமதிதம்மைக்கு தோன்றுமேதோன்றிநின்ற
சிற்பரமதனுளுள்ளச் செயலறுத்திடவிருக்குந்
தற்பரமாகிநின்ற சாக்கிராதீதந்தானே.'

(அருணகிரிநாத சுவாமிகள்.

யானே யெனவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற்பரமே.'

(திருவம்மானை.)

'சத்திய மானது சத்தே தானம்மானை
தற்போதம் போனவிடந் தற்பரமா மம்மானை.'

(திருவுந்தியார்.)

'இரவுபக லில்லா வின்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரய விரயநின் றுந்தீபற.'

(விநாயகபுராணம்)

'நித்தியமாய் நிர்க்குணமாய் நின்மலமாய் நிரஞ்சனமாய்
நிலையுங் கெட்டாச்
சத்தியமாய்த் தற்பரமாய்த் தத்துவமாய்ச் சச்சிதா
னந்த மாகி
யத்துவிதப் பொருளாகி யகண்டபரி பூரணமா
யமல னான
மெய்த்திறமுன் வைத்தவர்க்கு விநாயகனாம் வியந்தவதித்தேதார்
விரும்பிக் கேட்பார்.'

தயா, உமா, மாலா, க்ருபா, சிதா, ப்ரமா, பூஜா, கலா, கதா, க்ரியா முதலிய வடசொற்களி லீற்றுயிர்கெட்டு ஐகாரமேற்றுத் தயை, உமை, மாலை கிருபை, சிதை, ப்ரமை, பூசை, கலை, கதை, க்ரியை யெனத் தமிழில் வழங்குவது போலத் தேவதா என்னும் வடமொழியினீற்றுயிர் கெட்டு ஐகாரமேற்று 'தேவதை' யெனத் தமிழில் வழங்கி வந்தது. உதாரணம்.

'வேத முதலாய் விரித்தபன் னூல்க ளு
மோதி யொழிபு முறையாப் பொருடற்
போத மிறந்தோர் பொருந்துந் தேவதை
சிதமலரடி சிந்தையில் வைப்பாம்.'

இச் செய்யுளினும் 'வத்துவை' 'தனியை' 'ஆதியை' சொரூபத்தை, 'வியோமநிலையை' 'நிட்பிரபஞ்சப்பொருளை' 'நிர்விகாரத்தை' 'நிராமயத்தை' 'தேசோமயத்தை' 'அஞ்சலிசெய்வாம்' எனத் தனித்தனிக்கூட்டியுரைத்துக் கொள்க.

இத்தச செய்யுளுக்கு சங்கரி பரமாகப் பெண்பாலினும், சங்கரன் பரமாக ஆண்பாலினும் பொருளுரைத்தமை காண்க.

அ, அன், ஈஷதம், நிர், நின், நிஷ், இவை வடமொழி எதிர்மறையைக் குறிக்கும் உபசர்க்கங்க ளென்னும் முதல வடமொழிகள்.

எ, இன்-அசைநிலைகள்.

அது—பகுதிப்பொருள் விகுதி.

பிரகாசம், ஒளிர், இலகு, தேசு என்பனவும்; அத்துவிதம், தனி, ஏகம் என்பனவும்; சாசுவதம், நித்தம் என்பனவும்; வியோமம், வெளி என்பனவும்; நிர்மலம், சுத்தம் என்பனவும் தனித்தனி ஒருபொருட் கிளவிகள்.

ஆதி, அநாதி, ரஹிதம், சஹிதம்; நிராலம்பம், ஆலம்பம் இவை ஒன்றற்கொன்று மாறாகவந்த சொற்கள்.

தனி, ஆதி, நிலை, நிர்விகாரம், நிராமயம், தேசோமயம் முதலியவற்றை ஸ்வரூபமுடைய பொருளெனவுருவகஞ் செய்யப்பட்டது.

'ஆயிரமுகத்தா னகன்றதாயினும், பாயிரமில்லது பனுவ லன்றே' யென்றிருப்பதால் நூல் செய்யப்புகுந்த இக்கிர ந்தகர்த்தர் இம்மூன்று செய்யுளைப் பாயிரம்புகன்றதாம். இது தெய்வவணக்கம் கூறியபடி இவை கடவுள்வாழ்த்துத் துறையின் பகுதிகளாம்.

ஸ்ரீமத் தாயுமானசுவாமிகள் திருப்பாடல்களில் முதல் மூன்று பாட்டுகளுக்கு மகா வித்வானாகவிருந்த புரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்க ளியற்றிய உரை எமக்கு வெகு அருமையாகக் கிடைக்க, அவசியமுள்ள இடங்களிற் சீர்திருத்தி, ஆங்காங்குச் சேர்க்கவேண்டிய வைகளைச் சேர்த்து, பலசாத்திரங்களினின்றும் உதாரண ங்களை யெடுத்துக் காட்டி அச்சிடுவித்தனம்.

---

உ

சிவமயம்.

# நூலினுட்பிரிவு.


| | பக்கம் | | பக்கம். |
|---|---|---|---|
| திருவருள்விலாசப் பரசிவவணக்கம் | 1 | நினைவொன்று | 103 |
| | | பொன்னைமாதரை | 105 |
| பரிபூரணானந்தம் | 3 | ஆரணம் | 121 |
| பொருள்வணக்கம் | 10 | சொல்லற்கரிய | 124 |
| சின்மயானந்தகுரு | 14 | வம்பனேன் | 127 |
| மௌனகுருவணக்கம் | 21 | சிவன்செயல் | 129 |
| கருணாகரக்கடவுள் | 28 | தன்னையொருவர் | 132 |
| சித்தர்கணம் | 35 | ஆசையெனும் | 134 |
| ஆனந்தமானபரம் | 42 | எனக்கெனச்செயல் | 144 |
| சுகவாரி | 48 | மண்டலத்தின் | 150 |
| எங்குநிறைகின்ற பொருள் | 56 | பாயப்புலி | 153 |
| | | உடல்பொய்யுறவு | 167 |
| சச்சிதானந்தசிவம் | 64 | ஏசற்றவந்நிலை | 182 |
| தேசோமயானந்தம் | 71 | காடுங்கரையும் | 184 |
| சிற்சுகோதயவிலாசம் | 79 | எடுத்ததேகம் | 185 |
| ஆகாரபுவனம் சிதம்பரரகசியம் | 85 | முகமெலாம் | 186 |
| | | இடமுறுதவே | 196 |
| தேன்முகம் | 97 | தன்னை | 188 |
| பன்மாலை | 99 | ஆக்குவை | 188 |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| கற்புறுசிந்தை | 189 | அன்புநிலைமை | 274 |
| மலைவளர்காதலி | 190 | அன்பர்நெறி | 276 |
| அகிலாண்டநாயகி | 196 | அறிஞருரை | 277 |
| பெரியநாயகி | 196 | சித்துநிலை | 279 |
| தந்தைதாய் | 197 | நிலைபிரிந்தோர் கூடுதற்குபாயம் | 228 |
| பெற்றவட்கே | 199 | | |
| கல்லாலின் | 301 | காணபேறேலென் கண்ணி | 284 |
| பராபரக்கண்ணி | 206 | | |
| பைங்கிளிக்கண்ணி | 250 | ஆகாதோவென் கண்ணி | 288 |
| எந்நாட்கண்ணியில். | | | |
| தெய்வவணக்கம் | 257 | இல்லையோவென் கண்ணி | 291 |
| குருமரபின் வணக்கம் | 259 | | |
| | | வேண்டாவோவென் கண்ணி | 202 |
| அடியார்வணக்கம் | 260 | | |
| யாக்கையைப் பழித்தல் | 261 | கல்லறிலையென் கண்ணி | 292 |
| மாதரைப்பழித்தல் | 263 | பலவகைக்கண்ணி | 293 |
| தத்துவமுறைமை | 264 | நின்றநிலை | 296 |
| தன்னுண்மை | 267 | பாயிலின்றபறுவல் | 297 |
| அருளியல்பு | 268 | ஆனந்தக்களிப்பு | 298 |
| பொருளியல்பு | 270 | அகவல் | 305 |
| ஆனந்தவியல்பு | 275 | வண்ணம் | 307 |


நூலினுட்பிரிவு முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தாயுமானசுவாமிகள் பாடல்.

## திருவருள்விலாசப் பரசிவ வணக்கம்.

### ஆசிரிய விருத்தம்.

அங்கிங்கெனாதபடி யெங்கும்ப்ரகாசமா
யானந்தபூர்த்தியாகி
அருளொடுநிறைந்ததெது தன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொரு சித்தாகியின்பமா
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்ற வெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே

கண்டனவெலாமோன வுருவெளிய தாகவுங்
    கருதியஞ் சலிசெய்குவாம். 1

மௌனந்தப் பெற்ற பேரனந் தஞ்சுற்று
    முற்றவனந் தம்வினையினால்
உடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத்
    தோவனந் தம்பெற்றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற்
    றெய்வமு மனந்தபேதந்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னால்ஞான
    சித்தியா துணர்ந்து
காரனந் தங்கோடி வருஷித்த தெனவன்பர்
    கண்ணும்விண் ணுமொக்கவே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலைநங்
    கடவுளைத் துரியவடிவைப்
பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
    பெரியமௌ னத்தின்வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவா னந்தமாம்
    பெரியபொருளைப் பணிகுவாம். 2

அத்துவித வத்துவைச் சொர்ப்பிரகாசத் தனியை
    யருமறைகண் முறையிடவே
அறிவினுக் கறிவாகி யானந்த மயமான
    வாதியை யநாதியேக
தத்துவசொரூபத்தை மதசம்மதப் பெருஞ்
    சாலம்பாலிதமான

சகலநிட்கள நிராலம்பவாலம்ப
 சாந்தபதவ்யோமமிசையை
சுத்தநிர்மலசகித நிஷ்ப்ரபஞ்சப்பொருளை
 நிர்விஷயசுத்தமான
நிர்விகாரத்தைத் தடத்தமாய்நின்றொளிர்
 நிரஞ்சனநிராமயத்தைத்
சித்தமுமியாதப சித்தத்தினின்றிலகு
 திவ்யதேசோமயத்தைத்
சிற்பரவெளிக்குள்வளர் தற்பரமதானபர
 தேவதையைஅஞ்சலிசெய்வாம். 3

திருச்சிற்றம்பலம்.

---

பரிபூரணானந்தம்.

வாசாகயிங்கரிய மன்றியொருசாதன
 *மறிந்துவாயுநிற்கும்வண்ணம்
வாளாயமாகவும் பழகியறியேன்றுறவு
 மார்க்கத்தினிச்சைபோல
நேசாநுசாரியாய் விவகரிப்பேனந்த
 நினைவையுமறந்தபோது
நித்திரைகொள்வேன்தறக நின்றுமனவெளிமேவ
 நெஞ்சடைத்தயருவேன்
பேசாதவானந்த நிட்டைக்குமறிவிலாப்
 பேதைக்குமெவருதாரமே
பேய்க்குணமறிந்திந்த நாய்க்குமொருவழிபெரிய
 பேரின்பநிட்டையருள்வாய்

பாசாடவிக்குளே செல்லாதவர்க்கருள்
பழுத்தொழுகு தேதருவே
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 1

தெரிவாகவுள்ளன நடப்பனபறப்பன
செயற்கொண்டிருப்பனமுதற்
றேகங்களத்தனையு மோகங்கொள்பௌதிகஞ்
சென்மித்தலைந்திறக்கும்
விரிவாயபூதங்க ளொன்றோடொன்றாயுதய
மேற்கொண்டடங்குமதுவே
வெறுவெளிச்சாலம்ப கினைதருண்யமுபசாந்த
வெதுவெதாந்தஞானம்
பிரியாதபேரொளி பிறக்கின்றவருளுட்
பெற்றோர்கள்பெற்றபெருமை
பிறவாமையென்றதற்கு பிறவாமையாய்வக்து
பேசாமையாகுமெனவே
பரிவாயெனக்குநீ யறிவிக்கவந்தநீ
பரிபாகசாலமெனவோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 2

ஆராயுமிவ்வினையிற் செமாதியாறுமு
மைமையொருசெயலுமில்லை
அமைதியாயேபேசாத பெருமைபெறுகுணசந்த
ராமெனவிருந்ததொரு

சொகவொருகோப மொருவேளைவாலந்த
நினைவொன்றுமில்லாமலே
வெட்டிவிர்த்தாத்தட் டழிந்தளறுவார்வசனை
நிர்வாகமென்றபேரும்
பூராயமாவொன்று பேசமிடமொன்றைப்
புலம்புவார்வொத்திரிப்
போதுதுயிலோவென்று விரதியருமறிதுயிற்
போலேயிருந்துதுயில்வார்
பாராதிதனி லுன்ன செயலெலாமுடிவிலே
பார்க்கினின்செயலல்லவோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 3

அண்டபகிரண்டமும் மாயாவிகாரமே
யம்மாயையில்லாமையே
ஆமெனவுமறிவுமுன் டப்பாலுமறிகின்ற
வறிவினையறிந்துபார்க்கின்
என்புடைசவிராக்குமொரு தெய்வசற்குணமல்லாம
லில்லையெனுமறிவுமுண்டுன்
னியாமெனதறத்தரிய நிறைவாகிநிற்பதே
யின்பமெனவன்புமுண்டு
கண்டனவெலாமல்ல வென்றுகண்டனசெய்து
கருவிகரணங்களோயக்
கண்மூடியொருகண மிருக்கவென்றாற்பாழ்த்த
கர்மங்கள் போராடுதே

பண்டையுளகர்மமே கர்த்தாவெனும்பெயர்ப்
பசுபாவனிச்சிப்பனே
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 4

சந்ததமுமெனதுசெய லினதுசெயலாமெனுந்
தன்மையிலையன்றியில்லாத்
தன்மையால்வேறலேன் வேதாந்தசித்தாந்த
சமரசசுபாவமிதுவே
இந்தநிலைதெளியநா னெக்குருகிவாடிய
வியற்கைதிருவுளமறியுமே
இந்நிலையிலேசற் றிருக்கவென்றுன்மடமை
யிதசத்ருவாகவந்து
சிந்தைகுடிகொண்டதே மலமாயைகன்மந்
திரும்புமோதொடுவழக்காய்ச்
சென்மம்வருமோவெனவும் யோசிக்குதேமனது
சிரத்தையெனும்வாளுமுதவிப்
பந்தமறமெய்ஞ்ஞான தீரமுந்தந்தெனைப்
பாதுகாத்தருள்செய்குவாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 5

பூதலயமாகின்ற மாயைமுதலென்பர்சிலர்
பொறிபுலனடங்குமிடமே
பொருளென்பர்சிலர்கரண முடிவென்பர்சிலர்குணம்
போனவிடமென்பர்சிலபேர்

நாதவடிவென்பர்சிலர் விந்துமயமென்பர்சிலர்
நட்டநடுவேயிருந்த
நாமென்பர்சிலருருவ மாமென்பர்சிலர்கருதி
நாடிவருமென்பர்சிலபேர்
பேதமறவுயிர்கெட்ட நிலயமென்றிடுவர்சிலர்
பேசினருமென்பர்சிலபேர்
மின்னுமுன்னுங்கெட்ட சூனியமதென்பர்சிலர்
பிறவுமேமொழிவரிலையாற்
பாதரசமாய்மனது சஞ்சலப்படுமலாற்
பரமசுகநிட்டைபெறுமோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 6

அந்தகாரத்தையோ ரகமாக்கிமின்போல
னறிவைச்சுருக்கினவரார்
அவ்வறிவுதானுமே பற்றினதைபற்று
பழுத்தவுந்தமீதிலே
சொந்தமாய்வழுதப் படித்ததார்மெய்ஞ்ஞான
சுகநிட்டைசேராமல்
சோற்றுத்துருத்தியைச் சதமெனவுமுன்கொண்டு
தூங்கவைத்தவரார்கொலோ
தந்தைதாய்முதலான வகிலப்ரபஞ்சத்
தனைத்தந்ததெதாசையோ
தன்வினையேகொலோ பிறர்வினையேகொலோ
தற்காலமதுகொலோ

பந்தமானதுதந்த வினைவையேபோவதேனோ
பரமார்த்தமேதுமறியேன்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 7

ஆசாலெலாமொழிய வருவனவெலாமெய்த
மனதுசாக்ஷியதாகவே
மருவவிலைதந்தும் வேதாந்தசித்தாந்த
மரபுசமரசமாகவே
பூரணமாயுணர நுகமதுதந்தும்
பொய்யுடலை நிலையன்றெனப்
போதநெறிதந்தநுஞ் சாசுவதவானந்த
போகமேவிடென்னவே
நீசனமாயுருக வுள்ளன்புதந்தது
மின்னதருளின்னுமின்னு
மென்னைபேதுவினையென்ற வெள்ளைபோக்கவொரு
நினைவுசற்றுண்டாகிலோ
பாராதியறியாத மோனமேயிடைவிடாப்
பற்றாகநிற்கவருள்வாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 8

ஆழாழிகரையின்றி நிற்கவிலையோகொடிய
வாலமமுதாகவிலையோ
அக்கடலின்மீதுவட வானனிற்கவில்லையோ
வந்தரத்தநிலைகொடு.

நாபூபமளிலெரிந்த விளக்கிலேபோலேமருவுக்
தணுவாகவேயமிலையோ
சந்தமேகங்களும் வந்தநானுவேனவீற்
சஞ்சரித்திடவில்லையோ
பாபூரணவாழ்வே பிராணனைடியாற்றிலேயு
படமென்னைபாகவில்லையோ
மணிமந்த்ரமாதியால் வென்றிசித்திகளுலக
மார்க்கத்தில்வைக்கவில்லையோ
பாபூரணவெண்மனக் குவிபவொருதந்திரம்
பன்னுவதுனக்கருமையோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 9

ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்கட்டி
யாளினுங்கடன்மீதிலே
ஆணைசெலவேநினைவ ரளகேசனிகராக
வம்பொன்மிகவைத்தபேரும்
நேசித்துரசவாத வித்தைக்கலைந்திடுவர்
நெடுநாளிருந்தபேரும்
நிலையாகவேயினுங் காயகற்பந்தேடி
நெஞ்சுபுண்ணாவரெல்லாம்
யோசிக்கும்வேளையிற் பசிதீரவுண்பது
முறங்குவதுமாகமுடியும்
உள்ளதேபோதுநா னெனக்குளறியே
யொன்றைவிட்டொன்றுபற்றிப்

பாசக்கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்தநிலையையருள்வாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## பொருள் வணக்கம்.

நித்தியமாய்நிர்மலமாய் நிட்களமாய்நிராமயமாய்
நிறைவாய்நீங்காச்
சுத்தமுமாய்த்தூரமுமாய்ச் சமீபமுமாய்த்துரிய
நிறைகடந்ததாயெல்லாம்
வைத்திருந்ததாரகமா யானந்தமயமாகி
மனவாக்கெட்டாச்
சித்துருவாய்நின்றவொன்றைச் சுகாரம்பப்பெரு
வெளியைச் சிந்தைசெய்வாம். 1

யாதுமனநினைவுமற்ற நினைவுக்குநினைவாகி
யாதினாலும்
பேதமறநின் றுயிருக் குயிராகியன்பருக்கே
பேரானந்தக்
கோதிலமுதூற்றரும்பிக் குணங்குறியொன்றறத்
தன்னைக்கொடுத்துக்காட்டும்
நீதிபரமான நித்தானந்தப்பெருவெளியைச்
சிந்தைசெய்வாம். 2

பெருவெளியாயைம்பூதப் பிறப்பிடமாய்ப்பேசாத
பெரியமோனம்
வருமிடமாய்மனமாதிக் கெட்டாதபேரின்ப
மயமாய்ஞானக்
குருவருளாற்காட்டிடவு மன்பரைக்கொத்தறவிழுங்
கிக் கொண்டப்பாலுந்
தெரிவரிதாய்க்கலந்ததெந்தப் பொருளந்தப்
பொருளினையாஞ் சிந்தைசெய்வாம். 3

இகபரமுமுயிர்க்குயிரை யாமெனைத்தற்பவருநவை
யெந்தநாளுஞ்
சகபரிபூரணமான நிராலம்பகோசரத்தைத்
துரியவாழ்வை
அகமகிழ்வுறுந்தேனை முக்கனியைக்கற்கண்டை
யமிர்தைநாடி.
மொகுமொகெனவிருவிழிநீர் முத்திரைப்பக்கமலர்
* கண் முகிழ்த்துநிற்பாம். 4

சாதிகுலம்பிறப்பிறப்புப் பந்தமுத்தியருவுருவத்
தன்மைநாமம்
ஏதுமின்றியெப்பொருட்கு மெவ்விடத்துப்பிரிவற
நின் றியக்கஞ்செய்யுஞ்
சோதியைமாத்தூவெளியை மனதவிழநிறைவான
துரியவாழ்வைத்
தீதில்பரமாம்பொருளைத் திருவருளோடிணைவாகச்
சிந்தைசெய்வாம். 5

இந்திரசாலங்கனவு கானலினீரெனவுலக
    மெமக்குத்தோன்றச்
சந்ததமுஞ்சிற்பரத்தா லறியாததற்பரத்தைச்
    சார்ந்துவாழ்க
புந்திமகிழுறுகாலுந் தடையறவானந்தவெள்ளம்
    பொலிகவென்றே
வந்தருளுங்குருமௌனி மலர்த்தாளையனுதினமும்
    வழுத்தல் செய்வாம். 6

பொருளாகக்கண்டபொரு ளெவைக்குமுதற்
    பொருளாகிப் போதமாகித்
தெருளாகிக்கருதுமன்பர் மிடிதீரப்பருகவந்த
    செழுந்தேனாகி
அருளானோர்க்ககம்புறமென் றுன்னுதபூரணவா
    னந்தமாகி
இருடீரவிளங்குபொரு ளியாதந்தப்பொருளினையா
    மிறைஞ்சிநிற்பாம். 7

அருமறையின்சிரப்பொருளாய் விண்ணவர்மா
    முனிவர்சித்தராதியானோர்
தெரிவரியபூரணமாய்க் காரணங்கற்பனைகடந்த
    செல்வமாகிக்
கருதரியமலரின்மண மெள்ளிலெண்ணெயுடனு
    யிர்போற் கலந்தெக்காலுந்
துரியநடுவிருந்த பெரியபொருளியாததனைத்
    தொழுதல்செய்வாம். 8

Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை